# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

Follow us:

மலர் : 02, இதழ் : 515 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை (06.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 04 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## வீதித் தடைகளை அகற்றக்கோரி

## உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

02 பக்கம்

## நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு:

## சுயாதீன அணி சஜித்துக்கு கடிதம்!

02 பக்கம்

# பிரதி சபாநாயகர் விவகாரத்தால் புதிய அரசியல் சர்ச்சை வந்தது

## ஐக்கிய மக்கள் சக்தி - சுயாதீன குழு முரண்

02 பக்கம்



# இன்று ஹர்த்தால்!

## அரசுக்கு எதிராக அனைத்து தொழிற்சங்கங்களும் ஓரணியில் களத்தில்

02 பக்கம்



## பிரதி சபாநாயகராக மீண்டும் தெரிவான

# சியம்பலாபிட்டிய

### 148 வாக்குகள் கிடைத்தன

### இம்தியாஸூக்கு 65

### 3 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன

யோ.தர்மராஜ்

பிரதி சபாநாயகராக செயற்பட்ட ரஞ்சித் சியம்பலாபிட்டிய பதவி விலகியதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதால் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற புதிய பிரதி சபாநாயகருக்கான இரகசிய வாக்கெடுப்புத் தேர்வில், சுயாதீன அணிகளின் சார்பில் போட்டியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய வெற்றிபெற்று, மீண்டும் பிரதி சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு ஆதரவாக 148 வாக்குகளும் இவரை எதிர்த்து போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்காருக்கு ஆதரவாக 65 வாக்குகளும் கிடைக்கப்பெற்றன. 03 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று சபை அமர்வு கூடியது.

02 பக்கம்

## அரசாங்கத்துக்கு பெரும்பான்மையுள்ளதா?

### நாடாளுமன்றில் கேட்டார் ரணில்

யோ.தர்மராஜ்



நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் பதவிக்காக அரசாங்கக் கட்சியினால் வேட்பாளர் ஒருவரை முன்னிலைப்படுத்த முடியவில்லை. இதிலிருந்தே இந்த நாட்டின் நிலைமையை கண்டுகொள்ள முடியும். அரசாங்கத்திற்கு பெரும்பான்மை இருக்கின்றதா என்பதே தெரியவில்லை.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



அரசாங்கம் மட்டுமல்ல எதிர்க்கட்சி ஆட்களும் பார்லிமென்ட்டில வாயால தான் வடை சுடுறாங்கள்...

## இரகசிய வாக்களிப்பினை பரகசியமாக்கிய சஜித்!



### இம்தியாஸூக்கு வாக்களித்ததை கட்சிக்காரர்களுக்கு காட்டினார்

யோ.தர்மராஜ்

பிரதி சபாநாயகருக்கான இரகசிய வாக்களிப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தான் யாருக்கு வாக்களித்தேன் என்பதை காண்பிக்கும் வகையில், வாக்குச் சீட்டை பிரதமருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் சிறிது நேரம் காண்பித்தார். இந்தச் செயற்பாடு முற்றிலும் தவறானது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் எச்சரித்தார்.

02 பக்கம்

## சுயாதீனமானோரின் நாடகம் அம்பலமானது!

### சுமந்திரன் தெரிவிப்பு



பிரதி சபாநாயகர் தெரிவு, அரசாங்கத்தில் இருந்து வெளியேறிவிட்டதாக கூறியவர்களின் நாடகத்தை அம்பலப் படுத்தியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ட்விட்டரில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பதிவில் “பிரதி சபாநாயகர் பதவிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்மொழியப்பட்டுள்ள ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு ஆதரவு வழங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய சிலர் அரசாங்கத்திலிருந்து விலகிவிட்டதாக அண்மைய நாட்களில் அரங்கேற்றிய நாடகத்தை இது அம்பலப்படுத்தியுள்ளது” எனப் பதிவிட்டுள்ளார்.



# பஸ்களின் இயக்கம் ஒருவாரத்திற்கு நிச்சயமில்லை


## கெமுனு விஜேரத்ன



02 பக்கம்

## 65 பேர் மட்டுமே மக்களுக்காக:

# 148 எம்.பிக்கள் ராஜபக்ஷக்களுடன்!




### சாணக்கியன் சபையில் சாட்டை

நாடாளுமன்றில் 65 பேர் மட்டுமே மக்களுக்காக உள்ளதாகவும் 148 பேர் ராஜபக்ஷக்களுடனேயே தற்போதும் உள்ளனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றிய அவர், நாடாளுமன்றில் நடத்தப்பட்ட, நடத்தப்படும் நாடகங்கள் இன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளதாக குறிப்பிட்டார்.

02 பக்கம்

## கொலன்னாவ களஞ்சியசாலையில் எரிபொருளின்றி திரும்பும் பௌசர்கள்



02 பக்கம்

## பெற்றோல் விநியோகம் சீர்: டீசல் அனுப்புவதில் தாமதம்!

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு



நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறு காரணமாக மின் உற்பத்திக்காக டீசல் வழங்கப்பட வேண்டியுள்ளதால், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு...

02 பக்கம்

## உஷ்



அனுராதபுரத்தில் இருந்து இயங்கிவரும் தற்போதைய அரசாங்கத்தின் ஆஸ்தான சோதிடர் ஞானா அக்கா தனது மந்திர தந்திரத்தை பயன்படுத்தி நீர் யாகம் ஒன்று செய்துள்ளாராம். அந்த யாக நீரை காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தெளித்தால் அவர்கள் போராட்டத்தை கைவிடுவார்களென அரசுக்கு ஆலோசனை சொல்லப்பட்டுள்ளதாம். ஆனால் அந்த நீரை யார் சென்று தெளிப்பது என்ற கேள்வி எழுந்துள்ளதாம்.

## வீதித் தடைகளை அகற்றக்கோரி...

வீதியை மறித்து நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள வீதித் தடைகளை அகற்றுமாறு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறுகோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திர ஊடகவியலாளர் ஷெனால் ஜயசேகர மற்றும் சுற்றாடல் செயற்பாட்டாளர் ஹேமந்த விதானகே ஆகியோரால் இந்த அடிப்படை உரிமை மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வீதித் தடைகளை அமைக்கும் நடவடிக்கைகள் ஊடாக பொதுமக்களுக்கு உள்ள சுதந்திரமாக பயணம் செய்வதற்கான அடிப்படை உரிமை, சுதந்திரமாக ஒன்றுகூடுவதற்குள்ள அடிப்படை உரிமை என்பன மீறப்படுவதாக உத்தரவிடுமாறு குறித்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர், கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## பெற்றோல் விநியோகம் சீர்:...

தினசரி டீசல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று(05) நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் விஜேசேகர, நாளாந்தம் வழங்கப்பட்ட 4000 மெட்ரிக் தொன் டீசல் 1000 - 1500 மெட்ரிக் தொன்னாக குறைக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்திய கிரெடிட் லைன் மூலம் பெறப்பட்ட அடுத்த டீசல் கப்பல் எதிர்வரும் 11ஆம் திகதி வரவிருப்பதால் இந்த முடிவு எட்டப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

இந்திய கிரெடிட் லைன் ஊடாக பெறப்பட்ட பெற்றோல் கப்பல் நேற்று வந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் விஜேசேகர, பெற்றோல் பங்குகளை விரைவில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தில் தொழில்நுட்பக்கோளாறு ஏற்பட்டதாக ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டது. இந்த தொழில்நுட்பக்கோளாறு காரணமாக 7 முதல் 8 மணி நேர மின்வெட்டு ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின்கீழ் இந்தக் கொள்கை முடிவு எட்டப்பட்டதாக எரிசக்தி அமைச்சர் கூறினார். டீசல் கையிருப்பு அனல் மின் நிலையங்களில் பயன்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் என்றார்.

## அரசாங்கத்துக்கு...

எனவே, நாட்டின் முன்னேற்றத்துக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று (05) பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவுசெய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் பதவிக்காக அரசாங்கக் கட்சியினால் வேட்பாளர் ஒருவரை முன்னிலைப்படுத்த முடியவில்லை. எதிர்க்கட்சிகளின் சார்பில் இரண்டு பேர் பிரதி சபாநாயகர் பதவிக்கான வேட்பாளர்களாக முன்மொழியப்பட்டனர்.

அரசாங்கம் ஒருவரை வேட்பாளராக முன்னிலைப்படுத்தியிருந்தால், அரசாங்கத்திற்கு இருக்கும் ஆதரவை கண்டிருக்க முடியும். அரசாங்கத்திற்கு பெரும்பான்மை உள்ளதா என்பதே தெரியவில்லை. இதனால், எதிர்க்கட்சியிலிருந்து பிரதி சபாநாயகர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். இதிலிருந்தே இந்த நாட்டின் நிலைமையை கண்டுக்கொள்ள முடியும்.

எனவே, நாட்டின் முன்னேற்றத்துக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நாட்டு மக்கள் ராஜபக்ஷக்களை மாத்திரமே கூறுகின்றனர். முழுமையாக பொதுஜன பெரமுன கட்சியை செல்லுமாறு கூறவில்லை.

நாட்டில் பிரச்சினை தீவிரமாகியுள்ள நிலையில், இந்த வாரமும் நாடாளுமன்றம் பிரச்சினைக்கு தீர்வைக் காணவில்லை. எனவே அடுத்த வாரமாவது கூடி, முடியுமான தீர்மானத்தை எடுக்கவேண்டும். இதற்கு சபாநாயகர் முழுமையான முயற்சியை எடுக்கவேண்டும். இல்லையேல், நாடாளுமன்றில் கௌரவத்தை பாதுகாக்க முடியாது.

இந்த நிலையில், பொதுமக்கள் இறுதியில் நாடாளுமன்றத்துக்கே வந்து போராட்டம் செய்வார்கள். எனவே, எங்களால் முடிந்த முதற்கட்ட தீர்வையாவது எடுப்போம் - என்றார்.

## இரகசிய வாக்களிப்பினை...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (05) சபை அமர்வுகள் கூடியது. இதனையடுத்து, பிரதி சபாநாயகர் பதவிக்கான தேர்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வாக்களிப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அழைக்கப்பட்டார். வாக்களிப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தான் யாருக்கு வாக்களித்தேன் என்பதை காண்பிக்கும் வகையில், வாக்குச்சீட்டை பிரதமருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் சிறிது நேரம் காண்பித்தார்.

இதன்போது, எதிர்க்கட்சித் தலைவரின் இந்தச் செயலை சபாநாயகர் கண்டித்ததுடன், இரகசியத்தன்மை குறித்து பேசிவிட்டு, நீங்களே இவ்வாறு செயற்படுவது பொருத்தமற்றது எனவும் எச்சரித்தார்.

வாக்குச்சீட்டில் உறுப்பினர்களின் கையொப்பம் இருக்க வேண்டும் என சபாநாயகர் அறிவித்த போது, அது எவ்வாறு இரகசியத்தன்மையை பாதுகாக்கும் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பஸ்களின் இயக்கம்...

எரிபொருள் பிரச்சினையால் இன்று முதல் 7 நாட்களுக்கு பஸ்கள் இயங்குமா என்பது நிச்சயமற்றதாக உள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

டீசல் பற்றாக்குறையால் பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் பஸ்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று (06) நடைபெறவுள்ள 24 மணி நேர ஹர்த்தாலுக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமும் ஆதரவளிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கொலன்னாவ களஞ்சியசாலையில்...

கொலன்னாவ எண்ணெய் முனையத்தை தமது பௌசர்கள் சென்றடைந்தபோதிலும் போதியளவு எரிபொருள் வெளியிடப்படவில்லை என பௌசர் உரிமையாளர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதனால் நாட்டின் பல பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

## 65 பேர் மட்டுமே மக்களுக்காக:...

அவர் மேலும் கூறியதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவை தெரிவு செய்வார்களென நான் நினைக்கவில்லை.


ரஞ்சித் சியம்பலாபிட்டியவிற்கு வாக்களித்து, அவரை பிரதி சபாநாயகராக தெரிவு செய்த 148 பேரும் தற்போதும் ராஜபக்ஷக்களுடனேயே உள்ளனர்.

எனவே, அவரை எதிர்த்து போட்டியிட்ட இம்தியாஸ் பாக்கீர் மார்க்காருக்கு வாக்களித்த 65 பேர் மட்டுமே மக்கள் பக்கம் உள்ளனர்.

மேலும், நாடாளுமன்றத்தில் என்ன நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் இங்குள்ள நாடகக்காரர்கள், பொய்யர்கள். அதற்கு எதிராகவே வாக்களிப்பார்கள் என்றும் ஏனென்றால், அவர்களுக்கு ராஜபக்ஷக்களை காப்பாற்ற வேண்டும்.

பிரதி சபாநாயகர் தெரிவின்போது, சபைக்குள் முன்னெடுக்கப்பட்ட நாடகம் அப்பட்டமாக தெரியவந்தது. பிரதி சபாநாயகர் தெரிவுக்கு முன்னர், முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சியிலுள்ளவர்களிடம் சென்று சியம்பலாபிட்டியவை ஆதரிப்போம் என ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து கோரினார். ஆனால், அவர் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளார்.

எந்தவொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தாலும் நாடகக்காரர்கள், திருடர்கள், பொய்க்காரர்கள் யாரும் ராஜபக்ஷக்களுக்கு எதிராக வாக்களிக்கமாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.







## பிரதி சபாநாயகர் விவகாரத்தால்...

**யோ.தர்மராஜ்**

இடைக்கால அரசாங்கம் அமைப்பதில் ஐக்கிய மக்கள் சக்திக்கும் சுயாதீனக்குழுவுக்கும் இடையில் காணப்பட்ட முரண்பாடு, பிரதி சபாநாயகர் தெரிவையடுத்து மேலும் உக்கிரமடைந்துள்ளது.

அரசாங்கத்தின் தவறான முடிவுகளால் நாடு சீர்குலைவதாகக் கூறி ஆளுந்தரப்பிலிருந்து வெளியேறி சுதந்திரக்கட்சி உள்ளிட்ட 11 பங்காளிக்கட்சியும் பிரதான எதிர்க்கட்சியுடன் இணைந்து இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு கடும் முயற்சிகளை முன்னெடுத்தன.

எனினும், இந்த ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கீழ் உருவாக்கப்படும் இடைக்கால அரசாங்கத்தில் இணைய முடியாது என்பதோடு, அரசாங்கத்திற்கு எதிராகவும் ஜனாதிபதிக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் அறிவித்து வந்தது.

இந்த நிலையில், சுயாதீனக்குழுவுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் பல பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும் இடைக்கால அரசாங்கத்திற்கு சஜித் பிரேமதாச இணங்கவில்லை. இதனால், எதிர்க்கட்சி கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க முடியாது, எதிர்க்கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் டீல் இருப்பதாக சுயாதீனக்குழு உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இதனையடுத்து, சஜித் பிரேமதாசவும் அதற்கு பகிரங்கமாக பதிலளித்ததால் இரு தரப்புக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில், சுயாதீனக்குழு ஆளுந்தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி தேசிய இணக்க அரசாங்கத்திற்கு இணக்கம் தெரிவித்ததால், இந்த முரண்பாடு மேலும் உக்கிரமடைந்தது.

இந்நிலையில், பிரதி சபாநாயகராக செயற்பட்ட ரஞ்சித் சியம்பலாபிட்டிய தன்னுடைய பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, அப்பதவிக்கு புதிய ஒருவரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று (05) முன்னெடுக்கப்பட்டது.

வாக்கெடுப்புக்கு முன்னர், எதிர்க்கட்சி சார்பாக மீண்டும் சியம்பலாபிட்டியை களமிறக்க பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டபோதிலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினரும் ஆதரவும் வழங்குவதால் அவர் ஆளுந்தரப்பின் சார்பில் போட்டியிடும் ஒருவர் என எதிர்க்கட்சிக்குள் தெரிவிக்கப்பட்டதால், சுயாதீனக் குழுவின் மீதான கோபத்தில் பிரதான எதிர்க்கட்சி சார்பாக ஒருவரையும் அப்பதவிக்கு போட்டியிட வைத்தனர். எனினும், அரசாங்கத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஆளுந்தரப்பிலுள்ள பலர் எங்களுக்கு வாக்களிக்கலாம் எனவும் எதிர்க்கட்சி நினைத்திருந்தது. எனினும், ஆளுந்தரப்பின் முழு ஆதரவுடன் சியம்பலாபிட்டிய பிரதி சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டார். இதனால், ஐக்கிய மக்கள் சக்திக்கும் சுயாதீனக்குழுவுக்கும் இடையில் இருந்த முரண்பாடு உக்கிரமடைந்துள்ளது.

பிரதி சபாநாயகர் தெரிவையடுத்து சுயாதீனக்குழு உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் சபைக்குள் கடுமையாக வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், பிரதி சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட சுயாதீனக்குழுவின் உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் காரசாரமாக தங்களுடைய கருத்துகளை முன்வைத்தனர்.

**பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் தங்களுடைய பதவிகளிலிருந்து விலகினர். அத்துடன், சுயாதீனமாக வந்து எதிர்க்கட்சியிலும் அமர்ந்தனர். நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிகளையும் மக்கள் முகம் கொடுக்கும் பாதிப்புகளையும் அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தவே, இவர்கள் பதவிகளை துறந்து, எதிர்க்கட்சியில் அமர்ந்தனர். அந்த முடிவை பலப்படுத்தவே நானும் என்னுடைய பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்தேன்.

இந்த நிலையில், முழு எதிர்க்கட்சிகளும் இணைந்து என்னுடைய பெயரை மீண்டும் பரிந்துரைப்பதற்கான முடிவே இருந்தது. குறிப்பாக, எதிர்க்கட்சிகளின் பலத்தை காட்டுவதற்கு இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்றே நானும் நினைத்தேன். ஆனால், எதிர்க்கட்சி அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த தவறியது குறித்து கவலையடைகின்றேன். பாதையில் இறங்கிப்போராடும் மக்களின் துன்பத்தை காட்டிக்கொடுத்ததாகவே நான் கருதுகின்றேன் - என்றார்.

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச**

பிரதி சபாநாயகர் தெரிவின்போது, ஒவ்வொருவரின் தில்லுமுல்லும் முழு நாட்டுக்கும் தெரியவந்தது. ஒவ்வொருவரும் நடித்துக்கொண்டு மக்களை ஏமாற்றியது இன்று முழு நாட்டுக்கும் தெரியவந்தது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவு சியம்பலாபிட்டியவிற்கு கிடைக்கும் என்ற தகவல் கிடைத்த பின்னரே எங்களுடைய முடிவிலும் மாற்றம் வந்தது.

சியம்பலாபிட்டிய இன்று அரசாங்கத்தின் கைபொம்மையாக மாறியுள்ளதையிட்டு நாங்கள் கவலையடைகின்றோம். சபைக்குள் இடம்பெறும் நாடகம் இன்று முழு நாட்டுக்கும் தெரியவந்தது. வாக்கெடுப்பின் ஊடாக இங்கு இடம்பெற்ற அரசியல் நாடகம் முழு நாட்டுக்கும் போராட்டக்காரர்களுக்கும் தெரியவந்தது. ஆனால், எதிர்க்கட்சி ஒன்றாக இருக்கின்றது. நாங்கள் அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் எப்போதும் எதிர்ப்பாகும் - என்றார்.

## இன்று ஹர்த்தால்!...

**யோ. தர்மராஜ்**

நாடு முகம் கொடுத்துள்ள நெருக்கடிக்கு தீர்வு பெற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனக் கோரியும் மக்கள் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் வீட்டுக்குச்செல்ல வேண்டும் எனக் கோரியும் இன்று நாடு முழுவதும் ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளதால் அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் முடங்கும் அபாயத்தை எதிர்கொள்ளுமென தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

நாட்டிலுள்ள அரச, தனியார், அரச துறைகளிலுள்ள தொழிற்சங்கங்களே இவ்வாறு நாடு பூராகவும் ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. இதில் துறைமுகம், பொது போக்குவரத்து, பொருளாதார மத்திய நிலையங்கள், தபால், சுங்கம், வங்கி, மின்சாரத்துறை, சுகாதாரம், சமுர்த்தி, தனியார் தொழிற்துறை, ஆசிரியர்கள் மற்றும் புகையிரதத்துறை என பல துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களே இவ்வாறு ஒருநாள் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளன. இதனால் அத்தியாவசிய சேவைகள் முற்றாக முடங்கும் அபாயத்தில் உள்ளன.

நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும். குறிப் பாக, ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும் எனக்கோரி நாடு பூராகவும் போராட் டங்கள் உக்கிரமடைந்துள்ளன. இதன் ஒரு பகுதியாக காலிமுகத்திடலில் 28 நாட்களுக்கும் மேலாக இளைஞர், யுவதிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும், அரசாங்கத்தரப்பிலிருந்து எவ்வித பதிலும் கிடைக்காத காரணத்தினால் கடந்த 27 ஆம் திகதி ஆயிரத்துக்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் இணைந்து நாடு பூராகவும் ஹர்த்தாலை முன்னெடுத்ததுடன், அன்றைய தினம் பல போராட்டங்களையும் நடத்தியிருந்தன.

இதேவேளை, இன்றைய தினத்துக்குள் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகுவதற்கோ அல்லது நாட்டின் பிரச்சினைகளுக்கோ உரிய தீர்வு கிடைக்காதபட்சத்தில் மீண்டும் ஹர்த்தால் ஒன்றை முன்னெடுப்பதாக எச்சரிக்கை விடுத்திருந்தன. அதற்கமையவே, இன்று (06) நாடு பூராகவும் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டன.

இந்த அழைப்புக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், ஆசிரியர்கள் சங்கம், ரயில்வே ஊழியர்கள் சங்கம், குடிவரவு, குடியகல்வு தொழிற்சங்கங்கள், பெருந்தோட்டத்துறை தொழிற்சங்கங்கள், இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் சங்கம் என்பன தங்களுடைய முழு ஆதரவையும் வழங்குவதாக அறிவித்துள்ளது.

இதனால், இன்று பொது போக்குவரத்துகள், பாடசாலை கற்றல்செயற்பாடுகள், புகையிரத போக்குவரத்துகள், விமான நிலையத்தில் விசேட பிரமுகர்கள் நுழையும் விசேட நுழைவாயிலுக்கான சேவை, தொழிற்துறை செயற்பாடுகள் என ஒட்டுமொத்தத்துறையும் முடங்கும் அபாயமுள்ளதாக தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

## நம்பிக்கையில்லாப்...

**யோ.தர்மராஜ்**

ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாங்கள் ஆதரவு தருகின்றோம். ஆனால், அரசாங்கம் பதவி விலக்கப்பட்டதன் பின்னர் இடைக்கால அரசாங்கத்துடன் இணைவீர்களா, அல்லது நீங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொள்வீர்களா என்பதை எங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என சுயாதீனக் குழு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அரசாங்கம் மற்றும் ஜனாதிபதிக்கு எதிராக இரு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள நிலையில், அதற்கு ஆதரவளிப்பது குறித்தும் அதன் பின்னர் எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறித்தும் நேற்று (05) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உங்களுடைய தலைமையின் கீழான ஐக்கிய மக்கள் சக்தியினால் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்துள்ளதை ஊடகங்களின் வாயிலாக கண்டோம். நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக வந்து, எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் உறுப்பினர்கள் சார்பாக கீழே கைச்சாத்திட்டுள்ள நாங்கள், நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக எங்களுடைய உறுப்பினர்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம்.

நீண்டகாலமாக இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்ட பிழையான பொருளாதாரக் கொள்கைகள், தவறான பொருளாதார முடிவுகள், ஊழல் மோசடிகள் மற்றும் செலவீனங்களால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது, தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தன்னிச்சையான செயற்பாடுகளினால் மேலும் உக்கிரமடைந்தது. நெருக்கடியை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்வைப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளது. இதனால், அரசாங்கத்தின் மீது பெரும்பான்மையானவர்களுக்கு நம்பிக்கையில்லை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். எனவே, இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும். இல்லையேல் பதவி விலக்க வேண்டும் என்பதே எங்களுடைய நம்பிக்கையாகும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையின் ஊடாக அரசாங்கத்தை பதவி விலக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உங்களிடம் இருக்குமாக இருந்தால், அரசாங்கம் பதவி விலக்கப்பட்டதன் பின்னர் நாட்டை ஆட்சி செய்யும் திட்டமும் உங்களிடம் இருக்கும். அரசாங்கம் இன்றி, நாட்டை அராஜகத்திற்கு இட்டுச் செல்வது ஆபத்தானது.

எனவே, நிலைமையை ஆழமாக ஆராய்ந்து, தற்போதைய அரசாங்கம் பதவி விலக்கப்பட்டதன் பின்னர், முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து நாங்கள் உங்களிடம் இரு யோசனைகளை முன்வைக்கின்றோம்.

அதன்படி, நாட்டிலுள்ள மதத்தலைவர்கள், சிவில் அமைப்புகள், பொதுமக்கள் என அனைவரும் கூறும், நாங்கள் முன்வைத்த இடைக்கால அரசாங்கத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி இணைய வேண்டும். அல்லது, இடைக்கால அரசாங்கத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி விரும்பாது என்றால் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கும் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியை பொறுப்பேற்க வேண்டும். நாங்கள் எதிர்க்கட்சியிலிருந்து ஆதரவை வழங்குவோம்.

உங்களால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாங்கள் ஆதரவளிப்பதாயின், நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிப்பெற்றதன் பின்னர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுவழிகளில் நீங்கள் நடைமுறைப்படுத்தும் மாற்றுவழியை எங்களுக்கு அறியத்தர வேண்டும்.

இந்தக் கடிதத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக மைத்ரிபால சிறிசேன, 10 பங்காளிக்கட்சிகள் சார்பாக வாசுதேவ நாணயக்கார, சுயாதீனக்குழு சார்பாக அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

## பிரதி சபாநாயகராக மீண்டும்...

இதனையடுத்து, முற்பகல் 10.45 மணியளவில் பிரதி சபாநாயகர் பதவிக்கான தேர்வு முன்னெடுக்கப்படும் என சபாநாயகர் தெரிவித்தார்.

இதனையடுத்து, பிரதி சபாநாயகர் பதவிக்காக ஆளுந்தரப்பில் எந்தவொரு உறுப்பினரின் பெயரும் முன்வைக்கப்படவில்லை. மாறாக, ஆளுந்தரப்பிலிருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகளின் சார்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினரும் நேற்றுமுன்தினம் (04) பதவி விலகியதாக ஜனாதி பதி ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் பெயர் மீண்டும் முன்மொழியப்பட்டது.

சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான நிமல் சிறிபால டி சில்வாவால், ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் பெயர் முன்மொழியப்பட்டது. அதனை நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம் ஜயந்த வழிமொழிந்தார்.

இவருடைய பெயர் வழிமொழியப்பட்டதையடுத்து, ஆளுங்கட்சி சார்பாக எழுந்த பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆளுந்தரப்பு சியம்பலாப்பிட்டியவை ஆதரிக்கும் என சபையில் அறிவித்தார்.

இதனையடுத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில், இம்தியாஸ் பாக்கீர் மார்க்காரின் பெயரை பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார முன்மொழிந்தார். இதனை எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வழிமொழிந்தார்.

இதனையடுத்து, பிரதி சபாநாயகர் பதவிக்கு இருவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதால், வாக்கெடுப்பை நடத்துவதற்காக இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதற்கு சபாநாயகர் அறிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வாக்குச்சீட்டில் தான் தெரிவு செய்யும் வேட்பாளரின் பெயரை சரியாக எழுதி, தமது கையொப்பத்தையும் இடவேண்டும். பெயர் சரியாக எழுதப்படாவிட்டாலோ அல்லது கையொப்பம் இடப்படாவிட்டாலோ வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படும் என சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

எனினும், உறுப்பினர்கள் தங்களுடைய கையொப்பத்தை இடுவதாக இருந்தால், அது எப்படி இரகசிய வாக்கெடுப்பாக இருக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினர்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைக்கு அமையவே வாக்கெடுப்பு நடத்தப்படும். உறுப்பினர்களின் இரகசியத்தன்மை, நாடாளுமன்ற செயலாளரினால் பாதுகாக்கப்படும் என சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். இதனையடுத்து, இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதனையடுத்து, நாடாளுமன்றத்தின் மத்தியில் வாக்களிப்பதற்கான இடத்துக்கு வாக்களிக்க ஆரம்பித்தனர். அதன்படி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாக்களிப்பை ஆரம்பித்து வைத்தார். இதனையடுத்து, ஆளுந்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர்களின் பெயர்கள் அழைக்கப்பட ஒவ்வொருவராக வந்து வாக்களித்தனர்.

இதேவேளை, வாக்களிப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தான் யாருக்கு வாக்களித்தேன் என்பதை காண்பிக்கும் வகையில், வாக்குச்சீட்டை பிரதமருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் சிறிது நேரம் காண்பித்தார். எதிர்க்கட்சித் தலைவரின் இந்த செயலை சபாநாயகர் கண்டித்ததுடன், இரகசியத்தன்மை குறித்து பேசிவிட்டு, நீங்களே இவ்வாறு செயற்படுவது பொருத்தமற்றது எனவும் எச்சரித்தார்.

இரகசிய வாக்கெடுப்பு நண்பகல் 12.28 மணியளவில் நிறைவுபெற்றது. சபாநாயகர் முன்னிலையில், நாடாளுமன்ற செயலாளர், பிரதி செயலாளர்களின் பங்களிப்புடன் வாக்குகள் எண்ணப்பட்டன. பின்னர் ஒரு மணியளவில் முடிவு சபாநாயகரினால் அறிவிக்கப்பட்டது.

இதன்படி சுயாதீன அணிகளின் சார்பில் களமிறங்கிய ரஞ்சித் சியம்பலாபிட்டிய 148 வாக்குகளையும், எதிர்க்கட்சி சார்பில் களமிறங்கிய இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் 65 வாக்குகளையும் பெற்றனர். அந்தவகையில் நேற்றுமுன்தினம் பதவி விலகியதாக அறிவிக்கப்பட்ட ரஞ்சித் சியம்பலாபிட்டிய, நேற்று (05) மீண்டும் புதிய பிரதி சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச, நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி. விக்கினேஸ்வரன், மயந்த திசாநாயக்க, சாமர சம்பத் உள்ளிட்டோர் பங்கேற்கவில்லை.

# ஹர்த்தாலுக்கு ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுத்து துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்







நாடளாவிய ரீதியில் இன்று (06) இடம்பெற வுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி நேற்று (05) யாழ். நகரப் பகுதியில் துண்டுப்பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான சந்திரசேகரன் மற்றும் அவரது கட்சியை சேர்ந்தவர்கள் இணைந்து இந்த துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கும் யாழ். நகருக்கு வருகை தந்தவர்களுக்கும் இந்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

நாடளாவிய ரீதியில் அரச, அரச சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட சகல தரப்பினரும் இன்று 24 மணிநேர ஹர்த்தாலை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கப்ராலுக்கான வெளிநாட்டு பிரயாணத் தடை நீடிப்பு



முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பிரயாணத் தடை இம்மாதம் 23ஆம் திகதிவரை நீடிப்பதற்கு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனவெல உத்தரவிட்டுள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் 23ஆம் திகதி முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அஜித் நிவாட் கப்ராலுக்கு கடந்த இரண்டாம் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜராகுமாறு இதற்கு முன்னர் நீதவானினால் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும், 2ஆம் திகதி அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருந்தமையின் காரணமாக, இம்மாதம் 23ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்து அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் தென் மாகாண ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோனினால் முன்வைக்கப்பட்ட தனியாள் முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர், அஜித் நிவாம் கப்ராலுக்கு அந்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி ஆளுநராக கடமையாற்றிய போது அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தியதாக 06 குற்றச்சாட்டுகள் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செயற்படாத கடன்களாகவுள்ள 54 பில்லியன் ரூபா தொடர்பில் மக்கள் வங்கியிடம் கோப் குழு விசாரணை

தனியார் நிறுவனங்கள் பலவற்றுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டு தற்பொழுது செயற்படாத கடன்களாகவுள்ள 54 பில்லியன் ரூபா வழங்கப்பட்ட நிறுவனங்கள், அவை மதிப்பிடப்பட்ட விதம் மற்றும் இவற்றை அனுமதிப்பதற்கு தொடர்புபட்ட அதிகாரிகள் உள்ளிட்ட விடயங்களைக்கொண்ட முழுமையான அறிக்கையொன்று ஒரு மாத காலத்துக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) தலைவர் பேராசிரியர் சரித ஹேரத், மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷவுக்குப் பணிப்புரை விடுத்தார். இது தொடர்பான விபரங்கள் அடுத்த கோப் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2018, 2019ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கில் மக்கள் வங்கி நேற்று முன்தினம் (04) கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டபோதே அதன் தலைவர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு கடுமையான முயற்சிகளை எடுக்கவேண்டியுள்ள நிலையில், பணம் செலுத்தும் நிலையில் இல்லாமல் அல்லது போதுமான சொத்துகளை பிணையாக வைக்காமல் சில நிறுவனங்களால் 2, 3, 4 பில்லியன் ரூபா போன்று பாரிய தொகை கடன்களாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்திருப்பதாகவும், இதற்கு எந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது என்பது குறித்தும் உறுப்பினர்கள் இங்கு கவனம் செலுத்தினர். எதிர்காலத்தில் கடன்களை வழங்கும்போது தற்பொழுது காணப்படும் உரிய நடைமுறையின்கீழ் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், தேசிய சொத்துகள் குறித்து மேலும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் வங்கியின் முன்னாள் பொது முகாமையாளர் 2019ஆம் ஆண்டு ஓய்வுபெறும் போது அவர் பயன்படுத்திய வாகனம் குறைந்த பெறுமதிக்குக் கொடுக்கப்பட்டமை தொடர்பில் இங்கு தகவல்கள் வெளிப்பட்டன. கடந்த 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி 16.6 மில்லியன் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட மேர்சிரட்ஸ் பென்ஸ் ரக வாகனம் 2019ஆம் ஆண்டு 1,13,698 ரூபாவுக்கு முன்னாள் பொது முகாமையாளருக்கே வழங்கப்பட்டமையும் இங்கு புலப்பட்டது.

வங்கியின் பொது முகாமையாளர் வருடத்துக்கு மேலான காலம் பயன்படுத்திய வாகனத்தை இவ்வாறு அவருக்கே வழங்குவது வழமையாக இடம்பெறும் நிகழ்வு என்றும், பயன்படுத்திய காலத்துக்கமைய தேய்மானத்தைக் கருத்திற்கொண்டு சந்தையின் பெறுமதிக்கமைய இதற்கான விலை தீர்மானிக்கப்படும் என மக்கள் வங்கியின் தற்போதைய பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு தெரிவித்தார்.

16 மில்லியன் ரூபாவுக்கு அண்மித்த பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனம் ஒரு இலட்சத்து பதின்மூவாயிரம் ரூபாவுக்கு வழங்கப்பட்டமை எவ்வாறென குழு இங்கு கேள்வியெழுப்பியது. வங்கியிலிருந்து வாகனங்களை வழங்குவது தொடர்பிலான கொள்கை தற்பொழுது மாற்றப்பட்டிருப்பதாகவும், பொது முகாமையாளர் அல்லது பிரதிப் பொது முகாமையாளர் அப்பதவியிலிருந்து விலகும்போது 25 வருடங்களுக்கு மேலான காலப்பகுதி பணியாற்றியிருந்தால் மாத்திரமே இவ்வாறு வாகனங்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் பொது முகாமையாளர் இங்கு குறிப்பிட்டார்.

தேசிய சொத்துகளைப் பயன்படுத்தும்போது மீண்டும் சிந்தித்து பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் தற்போதைய நடைமுறையிலுள்ள செயற்பாடு விசேட அனுமதியின் கீழ் மாத்திரம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய கோப் குழு, இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிடுமாறு நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்குத் தெரிவித்தது. இதற்கமைய செயலாளரின் கீழ் உள்ள வங்கி அமைப்புக்கான வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும், பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் மட்டுமே இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்தார்.

இதற்கிடையில், 2015 இல் ஆரம்பிக்கப்பட்ட டேட்டா வேர் ஹவுஸ் திட்டத்துக்கு ஏறக்குறைய 402 மில்லியன் ரூபா செலவிடப்பட்டபோதிலும், அது எதிர்பார்த்த அளவு பயன்படுத்தப்படவில்லை எனவும் தெரியவந்தது. இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய மக்கள் வங்கியின் அப்போதைய தலைவரால் நியமிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கான தலைவர் இத்திட்டத்தை முன்னெடுத்த நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் என்பது பற்றியும் இங்கு பேசப்பட்டது.

இதற்கான சாத்தியக்கூற்று ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், பயன்படுத்த முடியாமல் உள்ள திட்டத்துக்காக ஏறக்குறைய 402 மில்லியன் ரூபா செலவிடப்பட்டமை பாரதூரமான விடயம் என்பதனால் அமைச்சு மட்டத்தில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் கோப் குழுவின் தலைவர், நிதி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார். மேலும் இவ்விடயம் குறித்து விசேட கணக்காய்வொன்றை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கோப் குழுவின் தலைவர் கணக்காய்வாளர் நாயகத்திடம் தெரிவித்தார்.

பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவருக்கு சொந்தமான நிறுவனத்துக்கும், அதன் துணை நிறுவனங்களுக்கும் கடன் வழங்கப்பட்டு, அவற்றை செயற்படாத கடன்களாக மாற்றியமையும் இங்கு புலப்பட்டது.

31.12.2019 நிலைவரப்படி, மொத்த கடன் தொகை 4.2 பில்லியன் ரூபாவாகும். இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினூடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மக்கள் வங்கியின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் நாலக கொடஹேவா, இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்த அமரவீர, ஜகத் புஷ்பகுமார, ரோஹித அபே குணவர்தன, பாட்டலி சம்பிக்க ரணவக்க, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கலாநிதி சரத் வீரசேகர, எரான் விக்ரமரத்ன, ஜயந்த சமரவீர, எஸ்.எம்.மரிக்கார், எஸ்.இராசமாணிக்கம், மதுர வித்தானகே மற்றும் பிரேம்நாத்.சி.தொலவத்த ஆகியோரும் கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# மக்களே தீர்மானம் எடுக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



யார் குற்றஞ்சாட்டினாலும் மக்களை அணுகுவதன் மூலம் மட்டுமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் எனவும், அரசாங்கம் திரிபுபடுத்தியதை சரிசெய்யும் வகையிலான பணி நடந்து வருவதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, டொலர், ரூபா, சதம் சார்ந்தே நாட்டைக் கட்டியெழுப்பும் அனைத்தும் தீர்மானிக்கப்படுவதாகவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நாட்டில் இனவாதத்தையும், மதவாதத்தையும், பிரிவினை வாதத்தையும் ஏற்படுத்தியவர்களுடன் எக்காரணம் கொண்டும் அரசாங்கங்களை அமைக்கவோ அல்லது அதில் பங்குபற்றவோ மாட்டோம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் இன்று (06) நாடு தழுவிய ஹர்த்தாலை நடத்த தீர்மானித்துள்ளது. அது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை நேற்று முன்தினம் (04) நடத்தியது.

இந்நிகழ்வில் முன்னணி தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட பெருந்திரளான பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

அனைத்து ராஜபக்ஷாக்களும் பதவி விலக வேண்டும் எனவும், நியமிக்கப்படவுள்ள இடைக்கால அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சியாக அமர்ந்து நேர்மறை அம்சங்களில் கண்காணிப்பு மட்டத்தில் சரியானதை ஆதரிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



ரமழான் பெருநாள் புரியாணி உணவு சவன் சாப்பாடு காலிமுகத்திடலில் முஸ்லிம் சிவில் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பௌத்த. கிறிஸ்தவ, இஸ்லாமிய மௌலவிமார்கள் இணைந்து உணவு பரிமாறினர். ஆர்ப்பாட்டத் திடலில் 150 சவன் சாப்பாடு பகிரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம் - அஷ்ரப் ஏ சமத்)




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மே 06ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# பொருளாதார அச்சம்!

பொய் ஒன்றை கூறி, அதனை மறைக்க இன்னுமொரு பொய்யைக் கூறி, கடைசியில் ஒரு பொய்யை மறைக்க ஆயிரம் பொய்களை சொல்லவேண்டி வரும் என்பதனை அறிந்தோ என்னவோ, கடந்த காலங்களில் இருந்த நிதியமைச்சர்களை விட சற்று வித்தியாசமாக செயற்பட்டு, அரச கஜானாவின் நிலைமையை ஒரேயடியாக பகிரங்கப்படுத்தியிருக்கிறார் நிதியமைச்சர் அலி சப்ரி.

நாட்டின் மோசமான பொருளாதார நிலைமை குறித்தும், அதிலிருந்து மீள்வதற்கான சில வழிகள் குறித்தும் நிதி, நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கோடி காட்டியிருக்கின்றார். நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து நாடாளுமன்றில் ஆற்றிய உரையிலேயே அவர் சில விடயங்களை விவரித்திருக்கின்றார்.

நாட்டுக்கான புதிய வரவு-செலவுத்திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்படும் என்றார் அவர்.

முன்னைய நிதியமைச்சர் என்ற முறையில் பெசில் ராஜபக்ஷ கடந்த வருட இறுதியில் சமர்ப்பித்த வரவு - செலவுத்திட்டம் ஒன்றுக்கும் உதவாதது எனக் குறிப்பிட்ட முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஆகையினால், மாற்றாகப் புதிய வரவு - செலவுத் திட்டம் ஒன்று அவசியம் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவினங்களை நிறுத்தி, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் புதிய வரவு - செலவுத்திட்டம் ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்ற அனுபவ அரசியல்வாதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்து ஏற்கப்பட்டிருக்கின்றது என்பதையே புதிய நிதியமைச்சரின் உரை உறுதிப்படுத்தியிருக்கின்றது. அது வரவேற்கத்தக்கது.

நாட்டின் வரிகளைப் பெருமளவில் குறைத்து, அதிக சலுகைகளை வழங்கியமை நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பின்னடைவுக்குள் தள்ளியுள்ளது என்று குறிப்பிட்ட நிதியமைச்சர், அதனால் புதிதாகச் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத்திட்டத்தில் வரி விதிப்புகள் அதிகமாக இருக்கும் என்ற சமிக்ஞையையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

நிதியமைச்சரின் இந்த வெளிப்படுத்தல் யதார்த்தமானது, நியாயமானது, மறுக்கப்பட முடியாதது. நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதற்கு மக்கள் தங்கள் சலுகைகளைத் தியாகம் செய்து, அரசுடன் சேர்ந்து நிதி பாரங்களைச் சுமக்க வேண்டியமை தவிர்க்க முடியாத பொறுப்புத்தான். “யதார்த்தவாதி வெகுஜன விரோதி” என்பது போல் மேலும் புதிய வரிகளை விதிப்பது தவிர்க்க முடியாத கட்டாயம் என்று கூறும் நிதியமைச்சர் அந்த உண்மையை வெளிப்படையாகப் பேசுகின்றமையால் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகக் கூடும்.

ஏற்கனவே, பொருளாதார நெருக்கடியால் துவண்டு போய்க் கிடக்கும் நாட்டின் பாமர மகனை, இந்தப் புதிய வரி விதிப்புகளின் அல்லது வரி உயர்வுகளின் தொடர் சங்கிலி நடவடிக்கைகள் மேலும் முடக்கப் போகின்றன. “மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக” அவனின் வாழ்வு மேலும் பெரும் அவலத்துக்குள் மூழ்கப்போகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதும், வெளிநாட்டுக் கடன்களின் மீள்செலுத்துகை தவணை முறையை சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசித் தள்ளிப்போடும் செயற்பாடும் நேரத்துடன் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை புதிய நிதியமைச்சர் சப்ரி ஒப்புக் கொள்கின்றார்.

இந்த அரசில் இதற்கு முன்னர் நிதி நிர்வாகம் மற்றும் பொருளாதாரக் கொள்கைக் கோட்பாடுகளை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பில் இருந்தவர்களின் சீத்துவத்துக்குத் தற்போதைய நிதியமைச்சர் கொடுக்கும் நற்சான்றிதழ் பத்திரமே இது.

இதுபோன்று நாட்டின் பொருளாதார நிலைமை இத்தகைய மோசமான கட்டத்தை அடைவதற்குக் காரணமாக அமைந்த சில பல தவறுகளை தமது உரையில் அவர் விவரித்திருக்கின்றார்.

அவை முற்றிலும் உண்மை. ஆனால், இத்தகைய தவறுகள் நேர்வதற்கு இடமளித்து, பொறுப்பற்றுச் செயற்பட்டவர்கள், நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்த தங்களின் நடவடிக்கைகளுக்காக தண்டிக்கப்படவோ, கண்டிக்கப் படவோ மாட்டார்கள் என்பதுதான் இதிலுள்ள பெரும் அவலமாகும்.

நிதியமைச்சர் அறிவித்துள்ள புதிய வரவு - செலவுத்திட்ட வருகை கூட மக்களின் மீது பொருளாதார சுமைகளையே சுமத்தப்போகிறது. வரிகளை உயர்த்துவதென்பது பொருட்களின் விலைகளை அதிகரிக்கப் போகிறோம் என்பதற்கான கட்டியம்தான். ஏற்கனவே, கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டுகொண்டிருந்த சமயம் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டனர் நாட்டு மக்கள்.

நிதியமைச்சர் கூறிய உண்மையால் நாங்கள் எங்கே இருக்கிறோம் என்பதை கிட்டத்தட்ட அறிந்துகொள்ள முடியும் நிலை இருக்கிறது. அதுதான் அச்சத்தையும் தருகிறது.



# நேட்டோ அமைப்பில் ரஷ்யா இணைந்திருந்தால்...

• நாகா

உக்ரைனில் நடந்துவரும் போருக்கான காரணம் பலருக்கும் தெரிந்திருக்கும். “நேட்டோ” என்று சுருக்கமாக அழைக்கப்படும் “நோர்த் அட்லாண்டிக் ட்ரீட்டி” அமைப்பில், அண்டை நாடான உக்ரைன் இணையக் கூடாது என்று ரஷ்யா கூறி வந்தது. ஆனால், நேட்டோவில் இணைக்க தற்போதைய உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஸெலென்ஸ்கி தலைமையிலான அரசு விருப்பம் தெரிவித்து வந்தது. அதனைத் தடுத்து நிறுத்தும் நோக்கில்தான் உக்ரைன் மீது போர் தொடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவுக்கே சவால் விடும் வகையில் வலிமை பெற்று விளங்கிய சோவியத் யூனியன், மற்ற ஐரோப்பிய நாடுகளை ஆக்கிரமிப்பதைத் தடுத்து நிறுத்துவதற்காக 1949ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுதான் நேட்டோ.

ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளுடன் தொடங்கப்பட்ட அந்த அமைப்பு, சோவியத் யூனியன் சிதறி வலுவிழந்த பிறகு கலைக்கப்படுவதற்கு பதில் மேலும் மேலும் உறுப்பினர்களை சேர்த்துக்கொண்டு தனது பலத்தைப் பெருக்கியது.

தொடக்கத்தில் 12 உறுப்பு நாடுகளைக் கொண்டிருந்த நேட்டோவில் தற்போது 30 நாடுகள் உள்ளன.

அதிலும், எந்த சோவியத் யூனியனுக்கு எதிராக நேட்டோ தொடங்கப்பட்டதோ, அதே சோவியத் யூனியனில் அங்கம் வகித்த நாடுகளையும் நேட்டோ தன்னுடன் இணைத்துக்கொண்டது.

இப்படி நேட்டோ அமைப்பு தங்களை நாலாபுறமும் சுற்றிவளைப்பதற்கு ரஷ்யா நீண்ட காலமாகவே எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. அந்த எதிர்ப்பின் உச்சம்தான் உக்ரைனில் தற்போது நடைபெறும் போர்.



நேட்டோவில் உக்ரைன் இணையும் விவகாரத்தால்தான் இந்தப் போர் வெடித்தது என்பது தெரிந்த பலருக்கும், ரஷ்யாவே நேட்டோவில் இணைவதற்கான வாய்ப்புகள் இருந்தமை தெரிந்திருக்காது.

ஆம், சோவியத் யூனியன் சிதறிய பிறகு, ரஷ்யாவும் நேட்டோவில் இணைவது குறித்து பரிசீலிக்கப்பட்டது.

நேட்டோவுக்கு எதிராக தற்போது ருத்ரதாண்டவம் ஆடிவரும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினே, “உங்கள் அமைப்பில் இணைய எங்களுக்கு எப்போது அழைப்பு விடுக்கப் போகிறீர்கள்?” என்று கடந்த 2000 ஆம் ஆண்டில் அப்போதைய நேட்டோ தலைவர் ஜோர்ஜ் ரொபர்ட்சனிடம் கேட்டார்.

அப்போது ரஷ்யாவின் இடைக்கால ஜனாதிபதியாக இருந்த அவர், அதற்கு முன்னதாக “ரஷ்யா என்பது ஐரோப்பிய கலாசாரத்தின் ஓர் அங்கம். எனது நாடு ஐரோப்பாவிலிருந்து தனிமைப்படுத்தப்படுவதை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது” என்றார்.

அப்படியிருக்கையில், நேட்டோவில் ரஷ்யா இணையாததற்குக் காரணம், நேட்டோதான் என்கிறார்கள் ஒரு தரப்பினர். நேட்டோவில் இணைவதற்கான அழைப்பு குறித்து புட்டின் கேட்டதற்கு, “அமைப்பில் இணையவேண்டுமென்றால் விண்ணப்பம் செய்யுங்கள். உங்களை நாங்களே அழைக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்” என்று ஜோர்ஜ் ரொபர்ட்சன் பதிலளித்ததை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டாலும், அதில் தாங்கள்தான் வெற்றி பெற்றதாக மேற்கத்திய நாடுகள் கருதின. அதனால், தங்களிடம் தோற்றுப்போன ரஷ்யாவை நேட்டோவில் இணைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று அந்த நாடுகள் கருதியிருக்கலாம் என்கிறார்கள் நிபுணர்கள்.

புட்டினுக்கு முன்னரே, 1990 களில் சோவியத் யூனியனின் கடைசி ஜனாதிபதி மிகையீல் கோர்பசேவும் அதனைத் தொடர்ந்து 2000 களில் ரஷ்யக் கூட்டமைப்பின் முதல் ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சினும் நேட்டோவில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்தனர். அதனை ஏற்று, மேற்கத்திய நாடுகள் அப்போதே ரஷ்யாவை நேட்டோவில் இணைத்துக்கொண்டிருந்தால் இப்போது இந்த உக்ரைன் போருக்கான தேவையே எழுந்திருக்காது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஐரோப்பிய யூனியனில் துருக்கியை இணைத்துக்கொள்வதற்கு மேற்கத்திய நாடுகள் இழுத்தடித்து வருவதைப் போலவே, தங்களுக்கு சமமில்லாத நாடு என்று அந்த நாடுகள் கருதிய ரஷ்யாவை நேட்டோவில் இணைத்துக்கொள்ளவும் அவை தயக்கம் காட்டின. இதனால்தான் ரஷ்யாவால் நேட்டோவில் இணைய முடியவில்லை என்கிறார்கள் நிபுணர்கள்.

எனினும், வேறு சிலர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ரஷ்யாவில் நிலவிய மேற்கத்திய எதிர்ப்புணர்வும் அதற்குக் காரணம் என்று அவர்கள் கூறுகின்றனர். பனிப்போர் முடிவுக்கு வந்தாலும், பல ரஷ்ய இராணுவ அதிகாரிகள், அரசியல்வாதிகள் மேற்கத்திய நாடுகளை வெறுத்தனர். மேலும், மேற்கத்திய எதிர்ப்பு அலையைக் கொண்டுதான் புட்டினே தேர்தலில் வெற்றி பெற்றார்.

அத்துடன், ரஷ்யாவின் எதிர்ப்பை அலட்சியம் செய்து நேட்டோ அமைப்பு, கிழக்கு நோக்கித் தன்னைத் தொடர்ந்து விரிவுபடுத்தி வந்தது. தங்களைத் தவிர மற்ற அனைத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் நேட்டோ இணைத்து வந்ததால் அந்த அமைப்பின் மீதான புட்டினின் விரோதம் வளர்ந்தது.

அது மட்டுமின்றி, செசன்யா பிரிவினைவாதத்துக்கும், ஜோர்ஜியா, உக்ரைன் உள்ளிட்ட நாடுகளில் ரஷ்ய ஆதரவு அரசுகளுக்கு எதிரான போராட்டங்கள் போன்றவற்றுக்கும் மேற்கத்திய நாடுகள் ஆதரவளித்தன. இது, பிராந்தியத்தில் தங்களது செல்வாக்கைக் குலைப்பதற்கான நடவடிக்கை என்று ரஷ்யா கருதுகிறது.

நேட்டோவில் அந்த நாடு இணைவதற்கு இதுவும் ஒரு தடைக்கல்லானது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இரண்டாம் உலகப் போரின்போது தீய சக்திகளான நாஜிக்களை மேற்கத்திய நாடுகளும், சோவியத் யூனியனும் இணைந்து நின்று தோற்கடித்தன. ஆனால், அதற்குப் பிறகு உலகில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டும் போட்டியில் இரு தரப்புகளும் பனிப்போரில் இறங்கின. இதனால் பல நாடுகளில் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டனர்.


அந்தப் பனிப்போர் ஒருவழியாக முடிவுக்கு வந்தாலும், ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் மனப்பான்மை மட்டும் முடிவுக்கு வரவில்லை. அந்த மனப்பான்மைதான் இப்போதும் மனித உயிர்களை பலிவாங்கிக் கொண்டிருக்கிறது.

★★★★

## இன்றைய நாளில்...


* 1757 – பர்மிய உள்நாட்டுப் போர் (1740–1757) முடிவுக்கு வந்தது.
* 1853 – “த லிட்டரரி மிரர்” என்னும் ஆங்கில மாத இதழை யாழ்ப்பாணத்தில் வைமன் கதிரவேற்பிள்ளை ஆரம்பித்தார் .
* 1854 – இந்தியாவில் முதல் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.
* 1889 – ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.
* 1967 – சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முஸ்லிம் குடியரசுத் தலைவரானார்.

## நக்கல் நமசிவாயம்



# அகழ்வு நடவடிக்கையின்போது தொல்பொருட்களுக்கு சேதம்

## சந்தேகத்தின் அடிப்படையில் இருவர் கைது





முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட மன்னாகண்டல், வசந்தபுரம் கிராமத்தில் தொல்பொருள் இடத்தினை அகழ்ந்து தொல்பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெற்களஞ்சியசாலைக்கான அடித்தளத்திற்கான மண் நிரப்பும் நடவடிக்கைக்காக அருகிலுள்ள வழிபாட்டு இடம் ஒன்றின் பகுதிகளை கனரக இயந்திரத்தினூடாக தோண்டியபோது தொல்பொருள் சிதைவுகள் அந்த பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இவற்றுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் வசந்தபுரம் கிராம அபிவிருத்தி சங்க தலைவர், குறித்த கனரக வாகனத்தின் சாரதி ஆகியோர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மன்னாகண்டல் கிராம சேவையாளர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர், படையினர் இதுதொடர்பில் கிராமசேவையாளரிடமும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த பிரதேசம் ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலகத்திற்கு சொந்தமான இடம் என்றும் விவசாயிகளின் நெல் காயவிடும் தளத்திற்காக இது அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலும், அந்த பகுதியில் மண் தோண்டுவதற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை என்றும் கிராம சேவையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் மற்றும் கனரக இயந்திரத்தின் சாரதி ஆகியோரை இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள். குறித்த பகுதி தொடர்பில் கிராமத்தினை அறிந்த வயதானவர் ஒருவர் தெரிவிக்கையில், "குறித்த நெல் தளம் அமைந்த பகுதிக்கு அருகில் ஒரு கூழா மரத்தினை கொண்ட சிறு குன்று போன்ற பகுதி காணப்படுகின்றது. இதில் காளி கோவில் என கிராமத்தினை சேர்ந்த ஒருவர் வழிபாடுகளை மேற்கொண்டு வந்துள்ளார். மரத்தின் கீழ் கற்களை வைத்து நீண்டகாலமாக வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்னாகண்டல் என்ற கிராமம் பெயர் வர காரணம், மன்னர் ஆண்ட பகுதியாக காணப்படுவதால் அருகில் கெருடமடு கிராமம் காணப்படுகின்றது. இந்த பகுதியில் மன்னர்கள் ஆண்டதற்கான தடயங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. ஆனால் தற்போது தொல்பொருள் இனம்காணப்பட்ட இடம் நீண்டகாலமாக காளி கோவில் என்று மரத்தின் கீழ் கல்வைத்து கற்பூரம் ஏற்றி வழிபாடுசெய்து வந்துள்ளார்கள்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியினை தொல்பொருள் திணைக்களம் மற்றும் படையினர் ஆகியோர் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அந்தப் பிரதேசத்தில் பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

## 05.05.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 148 72 | 164 4440 |
| கனேடியன் டொலர் | 170 4812 | 183 3518 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 43 631 | 45 282 |
| யூரோ | 273 031 | 288 507 |
| ஜப்பான் யென் | 1 6741 | 1 7818 |
| சிங்கப்பூர் டொலர் | 150 7833 | 16 85 7 |
| ஸ்ரேலிங் பவுன் | 342 2764 | 361 6181 |
| சுவிஸ் பிராங் | 258 163 | 272 0 04 |
| ஐ.அ.டொலர் | 245 7284 | 258 8880 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 817 2 5 |
| குவைட் | குவைட் தினார் | 0,03 7432 |
| ஓமான் | ஓமான் றியால் | 8 7 7083 |
| கட்டார் | கட்டார் றியால் | 84 7112 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 82 16 5 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 84 1503 |

# இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்க தமிழக முதல்வரினால் பிரேரணை முன்வைப்பு

## சர்வதேச இந்துமதபீடம் நன்றி தெரிவிப்பு



இலங்கை நாட்டில் அண்மையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர். அவர்களது சிரமங்களை போக்குவதற்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏகமனதாக இலங்கைவாழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பிரேரணை ஒன்றை முன்மொழிவு செய்து அதை நிறைவேற்றியும் கொண்டுள்ளார். இந்த முன்மொழிவுக்கு நன்றி தெரிவிப்பதாக சர்வதேச இந்துமதபீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இதன் மூலம் ஒதுக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் மத்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் மூலம் அனுமதி பெறப்பட்டு இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தினூடாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கான ஆயத்தங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் தக்க தருணத்தில் தங்கள் உளபூர்வமான உதவியினை முழு இலங்கைவாழ் மக்களுக்கும் ஓரளவேனும் இந்த நிதி உதவி மூலம் பொருளாதார சிக்கல் தீர வேண்டும் என ஓர் அர்ப்பணிப்பான உணர்வுடன் எடுத்த அவர்களுடைய இந்த சேவை காலத்தால் நிச்சயம் போற்றப்படும், மதிக்கப்படும். அந்த வகையில் இலங்கைக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் இந்தியாவின் உதவிக் கரம் இலங்கைவாழ் மக்களால் மறக்கமுடியாதவை.

மேலும் இலங்கைக்கான அத்தியாவசிய தேவைக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்க வேண்டும் என்று கேட்டுகொண்டதுடன் நன்றிகளுடன் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொரோனா பேரிடர் காலத்தில் கொரோனா தடுப்பூசியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரியவேளை, இலங்கைக்கு இலவசமாக முதன்முதலாக தந்துதவியது இந்திய நாடு என்றும் குறிப்பிட்டுள்ளார்.



முதலாம் ஆண்டுக்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் தேசிய நிகழ்வு கண்டி கல்வி வலயத்திற்குட்பட்ட கட்டுகஸ்தோட்டை சாஹிரா ஆண்கள் கல்லூரியில் இடம்பெற்றது. (படங்கள் - இக்பால் அலி)

# தொடரும் மக்கள் போராட்டங்கள்!

கொழும்பு - காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக முன்னெடுக்கப்படும் மக்கள் எழுச்சிப் போராட்டமானது 27ஆவது நாளாக நேற்றும் (05) முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு உடனடியாகப் பதவி விலகி, நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்தும் வருகைதந்த மக்கள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

இதனிடையே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவையைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி அலரிமாளிகைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டுவரும் 'மைனா கோ கம' போராட்டம் 11ஆவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பிரதேசங்களில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

# சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மாத்தளையில் உணவகங்கள் மூடப்படும் நிலை

(மாத்தளை நிருபர்)

நாடளாவிய ரீதியில் நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு தற்பொழுது மாத்தளை நகரையும் அதனை சூழவுள்ள உப நகரங்களையும் விட்டு வைக்கவில்லை. இதனால் பல உணவகங்கள் மூடப்படவேண்டிய அபாய நிலையில் இருப்பதாக உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மாத்தளை நகர உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கையில், சமையல் எரிவாயு முகவர்கள் தங்களுக்கு தேவையான சமையல் எரிவாயுவை முறையாக வழங்காமையின் காரணமாக தாம் பெரும் நெருக்கடிக்குள்ளாகி இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

மேலும் தேநீர், பரோட்டா, கொத்து ரொட்டி, சோறு மற்றும் கறி வகைகளை தயாரிப்பதற்காக பல எரிவாயு சிலிண்டர்கள் தேவைப்பட்டபோதிலும் ஓரிரு சமையல் எரிவாயு சிலிண்டர்களை வழங்குவதால் தமது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலையில், வெறுமனே உணவகங்களை திறந்து வைப்பதால் மின்சாரக் கட்டணமும் வீணாக செலுத்தப்படுகின்றது. அத்துடன் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி தினசரி சம்பளம் வழங்குவதை விட முற்றாக உணவகங்களை மூடி விடுவதே சாலப் பொருத்தமானதாக தோன்றுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

கொரோனா தொற்று ஆரம்பிக்கப்பட்டு முடிவடையும்வரை காலத்துக்கு காலம் நாடு முடக்கப்பட்டபோதெல்லாம் உணவகங்கள் உட்பட சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டதால் ஏற்பட்ட நட்டங்கள் போதாமைக்கு தற்போது சமையல் எரிவாயு தட்டுப்பாட்டால் மீண்டும் கடைகளை மூடவேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களையும் நிறுத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு சென்றுவிட்டதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

# மஸ்கெலியாவில் இன்று ஆர்ப்பாட்டம்

(மஸ்கெலியா நிருபர்)

தமிழ் முற்போக்கு முன்னணியால் இன்றைய தினம் (06) மஸ்கெலியா நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் அமைப்பாளர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், இன்றையதினம் மஸ்கெலியா பகுதியில் உள்ள அனைத்து மக்களும் கட்சி மத பேதமின்றி இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு எமது மலையக மக்களின் எதிர்ப்பினை எடுத்துக்காட்ட வேண்டும் எனவும், இந்த அரசாங்கத்துக்கு முடிவுகட்ட வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சீர்கேடுகள், பெருந்தோட்டத் தொழிலாளரின் வேதனம் 1000ரூபா, சலுகை விலை கோதுமை மா, எரிவாயு, மண்ணெண்ணெய், மின்சாரம், எரிபொருள் மற்றும் மருந்து பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவற்றுக்கும் நாட்டில் தற்போது நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளனர்.

# காரைநகர் தவறணையில் கத்திக்குத்து: இளைஞரொருவர் படுகாயம்

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியிலுள்ள கள்ளுத்தவறணையில் இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட தர்க்கம் கத்திக்குத்தில் முடிவடைந்ததில் இளைஞனொருவர் படுகாயமடைந்துள்ளார்.

சுழிபுரம் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய இளைஞரொருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளதுடன், அவர் படுகாயமடைந்த நிலையில் காரைநகர் வலந்தலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதன் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காரைநகரில் உள்ள கள்ளுத்தவறணையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் கள்ளு அருந்திக்கொண்டிருந்த இரு இளைஞர்கள் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி, கத்திக்குத்தில் முடிவடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதேவேளை, கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வல்லை பகுதியில் உள்ள மதுபானசாலை ஒன்றில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தர்க்கம் போத்தல் குத்தில் முடிவடைந்ததில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் மலேரியா விழிப்புணர்வு ஊர்வலம்

(மன்னார் நகர் நிருபர்)






மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் மலேரியா தடை இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், மலேரியா விழிப்புணர்வு நடைபவனி நேற்று (05) மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன் ஆரம்பமானது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமானது.

குறித்த ஊர்வலத்தில் வைத்தியர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மலேரியா தொற்று தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கலந்து கொண்டனர்.

குறித்த ஊர்வலமானது, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஆரம்பமாகி, பிரதான வீதியூடாக மன்னார் பசார் பகுதியை சென்றடைந்தது. மீண்டும் அங்கிருந்து மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை யை சென்றடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.




கொழும்பின் பல்வேறு பிரதேசங்களில் நேற்று எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (படப்பிடிப்பு : கிரிஷான் காரியவசம்)

# அனைவரும் ஏற்கும் அரசியல்யாப்பு உருவாக்கப்பட வேண்டும்

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அண்டனி ஜேசுதாசன்



(யாழ். நிருபர்)

வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் காலிமுகத்திடலில் தற்போதைய அரசாங்கத்தை வீட்டுக்கு செல்லுமாறுகூறி முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்திற்கு தனது ஆதரவை வழங்குவதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அண்டனி ஜேசுதாசன் தெரிவித்தார்.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையமும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் ஒன்றிணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு வடமாகாண கடற்றொழிலாளர் இணையமானது தனது ஆதரவை தெரிவித் துள்ளது. அத்தோடு வடபகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய உரிமைகளுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுக்கும். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரசானது திட்டமிட்ட வகையில் காணி சுவிகரிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதனை தடுத்து நிறுத்த வேண்டும். தற்பொழுது எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக மீனவர்கள் கடும் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றார்கள். எனவே, அதற்குத் தகுந்த தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்.

தமிழ்நாட்டு அரசாங்கமானது இந்திய இழுவைமடி தொழிலாளர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையாமல் இருப்பதற்கான ஒரு நாடாளுமன்றத் தீர்மானத்தை தமிழ்நாட்டு நாடாளுமன்றத்தில் எடுக்க வேண்டும். தற்போது நாடுபூராகவும் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் வெற்றிபெற்று ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டால் தற்பொழுது அரசாங்கத்தில் நாடாளுமன்றத்தில் உள்ளோர் யாரும் மீண்டும் அமையவுள்ள அரசாங்கத்தினுள் உள்வாங்கப்படக்கூடாது.

புத்திஜீவிகள் மற்றும் சமூகநலன் சார்ந்தோர் மாத்திரமே எதிர்வரும் அரசில் உள்வாங்கப்பட வேண்டும். அத்தோடு எல்லா இனங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சகல மத அடையாளத்தையும் பாதுகாக்கக்கூடிய ஓர் அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும்.

எனவே, பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய அன்றாடம் தொழிலுக்குச் சென்று உழைக்கும் மக்கள் கடும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். அனைவரும் ஏற்கும் அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் – என்றார்.

## இந்தியத் துணைத்தூதர் யாழ். பல்கலைக்கு விஜயம்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவராலயத்தின் துணைத் தூதுவர் ஜே. ராகேஷ் நட்ராஜ் நேற்று முன்தினம் (04) காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மரியாதை நிமித்தமான விஜயமொன்றினை மேற் கொண்டிருந்தார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவை சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்ததுடன், இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் புலமைப்பரிசில்கள் தொடர்பிலும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

# யாழில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றத்தில் இருவர் கைது!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மற்றும் நவாலி பகுதிகளில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 70 லீற்றர் கசிப்பு, ஒன்றே முக்கால் லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் சட்டவிரோதமான மதுபான உற்பத்தி நடைபெறுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியை சுற்றிவளைத்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை கைதுசெய்ததுடன் அவர்களிடமிருந்து சான்றுப் பொருட்களையும் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள மானிப்பாய் பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# குருநகரில் இளைஞன் கொலை; 8 மாதங்களாக ஒளிந்திருந்த மூவர் நீதிமன்றில் சரண்

(யாழ். நிருபர்)

குருநகரில் இளைஞன் கொலையுடன் முதன்மை சந்தேக நபரான ரெமி என அழைக்கப்படுபவர் உட்பட மூவர் சுமார் 8 மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் தமது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் சரணடைந்தனர்.

மூவரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் 22ஆம் திகதி பட்டப்பகலில் குருநகரில் வீதியில் வைத்து ஜெரன் (வயது-24) என்பவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவ தினத்தன்று நண்பர்களுடன் மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த மற்றொரு குழு அவர்கள் மீது சரமாரியாக வாள்வெட்டை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றிருந்தனர். சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மை சந்தேக நபர்களான ரெமி மற்றும் அவரது சகோதரர்களைத் தேடி தீவகம் உட்பட பல இடங்களில் தேடுதல் நடத்தினர். மேலும் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

9 நாட்களின் பின்னர் 6 பேர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். அவர்கள் உட்பட 14 பேர் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும், முதன்மை சந்தேகநபர்களான சகோதரர்களில் ஒருவரான ரெமி தலைமறைவாகியிருந்தார்.

சுமார் 8 மாதங்களின் பின் ரெமி உள்ளிட்ட மூவர் தமது சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் ஊடாக நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனை நிராகரித்த நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, சந்தேக நபர்களை மறு தவணை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, கொல்லப்பட்டவர், தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடையில் 2018ஆம் ஆண்டு மோதல் இடம்பெற்றதாகவும், அதன் தொடர்ச்சியாக இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

## யாழ். மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றுகூடல் விழா-2022



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட செயலகமும், மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் பேரவையும் இணைந்து நடத்திய "மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் ஒன்று கூடல் விழா" மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் பேரவையின் தலைவர் சுப்பையா பரம்சோதியின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதியோர்களை முன்னி லைப்படுத்தி முதியோர் நடனம், முதியோர் வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு பரிசில்களும், அன்பளிப்புகளும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனால் வழங்கப்பட்டன.

அத்துடன், யாழ். மாவட்ட 15 பிரதேச செயலகங்களிலிருந்தும் வறுமைக்குட்பட்ட 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜை ஒருவர் தெரிவு செய்யப்பட்டு 2,500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் திருமதி எஸ்.சி.என்.கமலராஜன் (சிறப்புவிருந்தினர்), வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை (யாழ். பல்கலைக்கழகம்), தம்பிஜயா கனகராசா (அத்தியட்சகர் அரச முதியோர் இல்லம் கைதடி), உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட மட்ட சிரேஷ்ட பிரஜைகள் பேரவையின் அங்கத்தவர்கள் மற்றும் கிராமிய, பிரதேச மட்ட முதியோர் சங்க அங்கத்தவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

# அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து டயகமவில் ஆர்ப்பாட்டம்: காலிமுகத்திடலை நோக்கி ஒருவர் நடைபயணம்



(க.கிஷாந்தன்)

அரசாங்கத்திற்கு எதிராகவும், விலைவாசி உயர்வு, எரிபொருள் தட்டுப்பாடு, தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் ஏமாற்றம் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையிலும் நுவரெலியா - டயகம, சந்திரிகாமம் தோட்டத்தைச் சேர்ந்த 33 வயதுடைய புஸ்பநாதன் தியாகு என்ற இரு பிள்ளைகளின் தந்தை ஒருவர் நேற்று(05) காலை நடைபவனியாக தனது பயணத்தினை ஆரம்பித்துள்ளார்.

இவரின் 178 கிலோமீற்றர் தூர நடைபயணமானது வெற்றிபெற வேண்டும் என தெரிவித்து தோட்டத்திலுள்ள பொதுமக்கள் ஆலயத்திற்கு முன்பாக இருந்து குறித்த நபரை வழியனுப்பினர்.

இதன்போது அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி 'கோட்டா கோ ஹோம்' என தெரிவித்து தேங்காய் உடைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அதனைத்தொடர்ந்து நாட்டின் தேசியக்கொடியை ஏந்தியவண்ணம் தனது நடைபயணத்தை ஆரம்பித்தார். இவருக்கு ஆதரவு தெரிவித்து தோட்டமக்கள் 03 கிலோமீற்றர் தூரம் கொண்ட டயகம நகரம் வரை பேரணியாக வருகை தந்தனர்.

கொழும்பு நோக்கி நடைபயணம் செய்யும் குறித்த நபருக்கு ஆதரவாக நகரத்தில் உள்ள வர்த்தகர்கள், பிரதேச மக்கள் அமோக வரவேற்பை வழங்கிய அதேவேளை, இவருக்கு மன்றாசி நகரத்திலும் பெரும் வரவேற்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சப்ரகமுவ மாகாண பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக நூறு வயலின் இசைக்கருவிகளை இசையமைப்பாளர் கீர்த்தி பெஸ்குவல் அன்பளிப்பு செய்துள்ளார். மேற்படி நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், மாகாண ஆளுநரின் செயலாளர் எச்.டி.சிசிர உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (சிவா ஸ்ரீதரராவ்)



அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை பதவி விலகுமாறு கோரியும் பொது மக்களால் எம்பிலிபிட்டியவில் இருந்து கொழும்பு காலிமுகத்திடலுக்கான பாதயாத்திரையை நேற்றுமுன்தினம் (4) முதல் ஆரம்பித்துள்ளனர். (இரத்தினபுரி நிருபர்)



2021ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் கண்டி, கலஹா பெருந்தோட்டப் பகுதியைச் சேர்ந்த லிட்டில்வெளி தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் பீ.ரொசான்(184), எஸ்.திலுக்சி(163), எல்.கபிலன்(155), ஜே.சுவிஷ்கன்(153), பீ.சதீஸ்(152), ஆர். ஹஷ்வித்(149), பீ.கமிஷ்கா(156), எஸ்.மிதுஷிகா(158) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களுடன் பாடசாலை அதிபர் எஸ்.யோகராஜ் மற்றும் பொறுப்பாசிரியர்களான ஆர்.ராமதாஸ், பி.விஜயநாயகி ஆகியோர் காணப்படுகின்றனர். (கண்டி நிருபர்)

# நாள்தோறும் நடக்கும் ஆர்ப்பாட்டம் குறித்து ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துவதில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்



ஜனாதிபதிக்கும், கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகவும் நாடு பூராகவும் மக்கள் தங்களுடைய எதிர்ப்பை நாள்தோறும் தெரிவித்துக்கொண்டே இருக்கின்றார்கள். எனினும், ஆட்சியாளர்கள் அது குறித்து கவனம் செலுத்துவதாக இல்லை என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை காரியாலயத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியினால் நாடு பாரியதொரு பின்னடைவை சந்தித்துள்ளதென நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

மேலும், இவ் அரசாங்கத்திற்கு மீண்டும் ஒரு அழுத்தத்தை தெரிவிக்கும் நோக்குடன் நாளைய தினம் (இன்று 6ஆம் திகதி) நடைபெறவுள்ள வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு மலையக மக்களும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் தமது முழுமையான ஆதரவை வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வரிசைகள் ஓய்ந்தபாடில்லை, சுகாதாரம், கல்வி பெருந்தோட்டமென அனைத்து துறைகளும் பாரியதொரு வீழ்ச்சியை கண்டுள்ளன. கடனால் ஒரு நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது. தொலைநோக்குப் பார்வையும் திறன்பட செயற்பாடும் ஒரு ஆட்சிக்கு மிக முக்கியமானது – என்றார்.

# கொழும்புத் துறைமுக நகரத்தின் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து லண்டனில் விளக்கம்





லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் சி.எச்.இ.சி. போர்ட் சிட்டி கொழும்பு (பிரைவேட்) லிமிடெட் மற்றும் பொதுநலவாய நிறுவன மற்றும் முதலீட்டு சபை ஆகியவற்றுடன் இணைந்து கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தில் கல்வி மற்றும் நிதித் துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்த விளக்கக் காட்சியை அண்மையில் இங்கிலாந்து முதலீட்டாளர்களுக்கு உயர்ஸ்தானிகராலய வளாகத்தில் ஏற்பாடு செய்தது.

வரவேற்புரையை ஆற்றிய ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன, பிரித்தானியக் கல்வி முறையுடன் இணக்கமான கட்டமைப்பையும் கட்டமைப்பையும் கொண்ட இலங்கையின் கல்வித்துறையானது இரு நாடுகளுக்கு மிடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்துவதற்கு எப்போதும் ஊக்கியாக விளங்குவதாக குறிப்பிட்டார். அவர் பிரித்தானிய நிறுவனங்களை இலங்கையில் வர்த்தக முத்திரைக் கல்வியில் பங்காளியாகுமாறு அழைத்தார்.

நிகழ்வில் உரையாற்றிய பொதுநலவாய நிறுவன மற்றும் முதலீட்டுப் பேரவையின் பிரதித் தலைவர் சேர் ஹியுகோ ஸ்வைர், பிரித்தானிய நிறுவனங்களுடன் இணைந்து இலங்கையில் முதலீடு செய்யுமாறு வலியுறுத்தினார். பொதுநலவாய நிறுவன மற்றும் முதலீட்டுப் பேரவை இலங்கைக்கு உரிய முதலீட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுவதற்காக இலங்கையுடன் நெருக்கமாகப் பணியாற்ற விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

சி.எச்.இ.சி. போர்ட் சிட்டியின் உதவி முகாமைத்துவப் பணிப்பாளர் துல்சி அலுவிஹாரே, கொழும்பிலிருந்து நிகழ்வில் கலந்துகொண்டதுடன், ஆசியாவிலேயே நவீன வசதிகளைக்கொண்ட ஒரே நீர்முனை திட்டமிடப்பட்ட நகரமான போர்ட் சிட்டி திட்டத்தின் மேலோட்டப் பார்வையை வழங்கினார். துறைமுக நகர நிர்மாணத்தின் முன்னேற்றம் மற்றும் அது வழங்கும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் அவர் சாத்தியமான முதலீட்டாளர்களை ஊக்குவித்தார்.

நிகழ்வில் பேசிய கேட்வே குழுமத்தின் தலைவர் கலாநிதி ஹர்ஷ, தெற்காசியப் பிராந்தியம் மற்றும் அதற்கப்பால் உள்ள பிரித்தானிய அமைப்பு மற்றும் நெறிமுறைகளுக்கிணங்க போர்ட் சிட்டியில் ஒரு சர்வதேச பாடசாலையை நிறுவுவதற்கு பிரித்தானியப் பாடசாலையுடன் கூட்டு சேர்வதற்கு தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

நிகழ்வின் இறுதிப் பிரிவானது ஐடியல் குழுமத்தின் பிரதித் தலைவர் அரவிந்த டி சில்வா, ஒக்சிஜி குழுமத்தின் சிரேஷ்ட கல்வி ஆலோசகர் ஜோன் ஷா, கலாநிதி ஹர்ஷ, அல்லஸ் மற்றும் துல்சி அலுவிஹாரே ஆகியோரின் பங்கேற்புடன் சி.எச்.இ.சி. போர்ட் சிட்டி கொழும்பின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிராந்திய பணிப்பாளர் (ஐக்கிய இராச்சியம்) ராதிகா எல்லேபொலவினால் கேள்வி மற்றும் பதில் அமர்வு நடத்தப்பட்டது.

# உலக ஊடக சுதந்திர சுட்டெண்ணில் இலங்கைக்கு 146 ஆவது இடம்

உலக ஊடக சுதந்திர தர வரிசையில் இலங்கை 19 இடங்கள் பின்தங்கியுள்ளது. செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, உலக ஊடக சுதந்திர சுட்டெண்ணில் இலங்கை 146ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

உலகிலுள்ள 180 நாடுகளின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் நோர்வே முதலிடத்தில் உள்ளது. இரண்டாம் இடம் டென்மார்க்கிற்கும், மூன்றாம் இடம் சுவீடனுக்கும் கிடைத்தது.

2021ஆம் ஆண்டில், உலக பத்திரிகை சுதந்திர சுட்டெண்ணில் இலங்கை 127ஆவது இடத்தில் இருந்தது. 2020இல் 127ஆவது இடத்திலும் 2019 இல் 126ஆவது இடத்திலும் 2018 இல் 131ஆவது இடத்திலும் இருந்தது.

இந்த ஆண்டு, உலக ஊடகக் குறியீட்டில் இந்தியா 150ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 162ஆவது இடத்திலும், மியன்மார்176ஆவது இடத்திலும் உள்ளன.

# கல்வியங்காடு பகுதியில் வாள்வெட்டுச் சம்பவம்


## இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதி

நல்லூர் கல்வியங்காடு பகுதியில் உள்ள வீடொன்றுக்கு முன்பாக வைத்து இருவர் மீது வாள்வெட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் படுகாயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அண்மையாக உள்ள வீடொன்றின் முன்பாக நேற்று முன்தினம் இரவு 6.40 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

47 வயதுடைய இருவரே தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளனர். மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஆரம்ப விசாரணைகளின் பின்னர் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் முன்பாக இருவர் மோட்டார் சைக்கிள்களில் நின்று கதைத்துக்கொண்டிருந்தபோது அங்கு 2 மோட்டார்சைக்கிள்களில் வந்த மூவர் வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதுடன், மோட்டார் சைக்கிள்களையும் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.



கல்வியங்காடு செங்குந்தா மைதானம் தொடர்பான பிணக்கே இந்தத் தாக்குதலின் பின்னணியாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்றமை தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதும் சில மணித்தியாலங்களின் பின்பே சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வருகை தந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளத.

# 7,00,000 தாய் பாட்கள் தாய்லாந்து சபாநாயகரினால் இலங்கைக்கு கையளிப்பு

தேசிய சட்டமன்றத்தின் தலைவரும் தாய்லாந்து இராச்சியத்தின் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகருமான சுவான் லீக்பாய், 7 இலட்சம் தாய் பாட் பெறுமதியான காசோலையை தாய்லாந்து இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவர் மற்றும் யுனெஸ்காப்பின் நிரந்தரப் பிரதிநிதியான சி.ஏ.சமிந்தா ஐ. கொலொன்னவிடம் அண்மையில் பேங்கொக்கிலுள்ள நாடாளுமன்றத்தில் வைத்து கையளித்தார்.



இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு உதவ எடுத்த தனது முயற்சிக்கு ஆதரவளித்தமைக்கு நன்றி தெரிவித்த அதேவேளை, ரத்தனகோசின் காலத்திலிருந்து பௌத்தத்தின் அடிப்படையில் தாய்லாந்துடன் நீண்டகால உறவை வளர்த்துக் கொண்ட ஒரே நாடு இலங்கை மட்டுமே என தேசிய சபையின் தலைவரும் தாய்லாந்து இராச்சியத்தின் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகருமான சுவான் லீக்பாய் குறிப்பிட்டார். இலங்கை ஒரு நெருக்கடியை எதிர்நோக்கும் போது, தாய்லாந்து அரசியல்வாதிகள் மற்றும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் மற்றும் செனட்டர்கள் இலங்கைக்கு எவ்வாறு உதவலாம் என்பது குறித்தும் அவர் மேலும் கலந்துரையாடினர்.

7 இலட்சம் தாய் பாட் நன்கொடையானது அதிகமானதொரு தொகை இல்லை. எனினும், இது கடினமான காலங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் உண்மையான நண்பர்களின் உணர்வை பிரதிபலிக்கின்றது எனக் குறிப்பிட்டார்.

மிகவும் வணக்கத்திற்குரிய சோம்டெட் /பிரா மகா திரச்சன், வாட் ப்ரா சேது/போன் விமன் மங்கலராம் ராஜ்வரமஹாவிஹான் மடாதிபதி மற்றும் தாய்லாந்தின் சங்க உச்ச சபையின் குழு ஆகியவை தற்போதைய கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியின்போது, அனைத்து மனிதர்களிடையேயும் கருணை மற்றும் ஆதரவின் நேர்மறையான அறிகுறி இருப்பதாக வலியுறுத்தினார். சோம்டெட் ஃபிரா மகா திரச்சன் அனைத்து மதங்களின் நலன்விரும்பிகளுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

தூதுவர் சி.ஏ. சமிந்த ஐ. கொலொன்ன தேசிய சட்டமன்றத்தின் தலைவர் மற்றும் தாய்லாந்து இராச்சியத்தின் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் மற்றும் பௌத்த சங்கங்கள், தாய்லாந்து இராச்சியத்தின் பிரதிநிதிகள் சபை மற்றும் அனைத்து நலன் விரும்பிகளுக்கும் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

மிகவும் வணக்கத்திற்குரிய ஃபிராப்ரோம் சேனபோடி, வாட் பாத்தும் கோங்காவின் மடாதிபதி மற்றும் தாய்லாந்தின் சங்க உச்ச சபையின் குழு, நேபாளம், தம்மதுதா இந்தியா - நேபாளம் மற்றும் வாட் தாய் புத்தகயாவின் மடாதிபதி, செனட் செயலகத்தின் சர்வதேச விவகாரக் குழுவின் செனட்டர் பிகுல்கேவ் க்ரைரோக், ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகளான கலாநிதி. இஸ்ஸரா செரீவத்தனாவுத் மற்றும் ஓங்கார்ட் கிளம்பைபுன் ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர். தூதுவருடன் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் ஏ.டபிள்யு.எஸ். சமன்மாலியும் இணைந்திருந்தார்.

# பப்ஜி விளையாடுவதில் மூழ்கியிருந்த குடும்பத்தலைவர் உயிர்மாய்ப்பு

கைபேசியில் பப்ஜி விளையாடி வந்த குடும்பத்தலைவரொருவர், தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 28 வந்துடைய குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரை மாய்த்துகொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 2 வாரங்களுக்குள் இரண்டாவது நபர் அலைபேசியில் இணைய வழி போர் விளையாட்டில் ஈடுபட்டு உயிரை மாய்த்துள்ளனர்.

"நேற்று முன்தினம் இரவு படம் பார்த்துவிட்டு தூக்கத்துக்குச் சென்றோம். காலையில் எழுந்து பார்த்தபோது, கணவர் தூக்கிலிட்டு சடலமாக இருந்தார். எப்போதும் பப்ஜி விளையாடுவதில் ஆர்வமாக இருப்பார். வேறு பிரச்சினைகள் அவருக்கு இருக்கவில்லை" என்று மனைவி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை முன்னெடுத்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த மாத இறுதியில் இளவாலையைச் சேர்ந்த இளைஞன் இதேபோன்ற காரணத்தினால் உயிரை மாய்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியா அரசாங்கத்தால் மருத்துவ உபகரணங்களை நன்கொடை







இலங்கை மக்களுக்கான மருத்துவப் பொருட்கள் வடிவிலான மனிதாபிமான உதவிக்காக இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, ஐ.டி.ஆர். 22, 15,59,52,245.00 அல்லது 1.5 மில்லியன் டொலர் மொத்த பெறுமதியான 11 வகையான மருந்துகளையும் 8 வகையான மருத்துவ உபகரணங்களையும் இந்தோனேசிய அரசாங்கம் நன்கொடையாக வழங்கியது.

மனிதாபிமான உதவிகள் வழங்கும் விழா அண்மையில் சோகர்னோ ஹட்டா சர்வதேச விமான நிலையத்தின் கபுரா ஏற்றுமதி கிடங்கு கட்டடத்தில் நடைபெற்றது. இந்தோனேசியா மற்றும் ஆசியான் நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர் யசோஜா குணசேகரவிடம் இந்த நன்கொடை இந்தோனேசியாவின் சுகாதார அமைச்சின் செயலாளர் நாயகத்தினால் கையளிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, உலக சுகாதார ஸ்தாபனத்தின் நாட்டு அலுவலகம், இந்தோனேசியாவின் மருந்து மற்றும் மருத்துவ சாதனங்கள் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் இந்தோனேசியாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மருத்துவப் பொருட்கள் முறையே ஸ்ரீ லங்கன் எயார்லைன் விமானங்கள் மூலம் இலங்கைக்கு கொண்டுசெல்லப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வல்லை கொலைச் சம்பவம்!

## சந்தேகநபர்கள் இருவர் பொலிஸ் நிலையத்தில் சரண்

யாழ்ப்பாணம், வல்லை பகுதியில் அமைந்துள்ள மதுபான சாலையில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் இருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் வல்லை பகுதியில் அமைந்துள்ள மதுபான நிலையத்தில் கடந்த 3ஆம் திகதி இரவு இரு இளைஞர்கள் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தர்க்கம் போத்தல் குத்தில் முடிவடைந்ததில் திக்கம் பகுதியை சேர்ந்த குணசேகரம் குணசோதி (வயது 25) எனும் இளைஞன் உயிரிழந்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் நால்வரை அடையாளம் கண்டிருந்தனர்.

அவர்களை கைது செய்தவற்கு நடவடிக்கை எடுத்திருந்த நிலையில் அல்வாய் பகுதியை சேர்ந்த இருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர். அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட இருவர் தொடர்ந்தும் தலைமறைவாகியுள்ளதாகவும் , அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் , சரணடைந்துள்ள இருவரும் அன்றைய தினம் பிரதான சந்தேகநபருடன் மது அருந்திய நபர்கள் எனவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.




தரம் ஒன்றுக்கு புதிய மாணவர்களை சேர்க்கும் கல்வி அமைச்சின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கெக்கிராவ கல்வி வலயத்திலுள்ள மரதன்கடவள அல் அமீன் முஸ்லிம் வித்தியாலத்தில் தரம் ஒன்றுக்கு புதிய மாணவர்களை சேர்க்கும் நிகழ்வு அதிபர் எஸ்.எம்.கவுஸ் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள் - அநுராதபுரம் நிருபர்)

திகதி 04.05.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 4752
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.12,092,800.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 0 5 4 3 8 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.19,681,240.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1242
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,017,780.00
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 9 7 8 4 9 3
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ.11,143,887.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 782
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,995,920.00
வெற்றி இலக்கினம் F வெற்றி இலக்கங்கள் 23 41 59 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,704,225.20

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0061
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,412,280.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 01 04 09 19
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,204,969.80

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1100
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,894,240.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.250,690,286.00
B 12 20 24 28 43
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

## நிந்தவூர் பஸ்தரிப்பு நிலையத்தைச் சூழ பற்றைக் காடும் குப்பைகூளங்களும்



(நிந்தவூர் நிருபர்)

நிந்தவூர் பிரதேசத்தில் சபைக்குட்பட்ட அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பயணிகள் பஸ்தரிப்பு நிலையத்தைச் சூழ புற்களும் பூண்டுகளும் வளர்ந்து பற்றைக்காடாக காட்சியளிப்பதுடன், அருகில் குப்பைகூளங்கள் நிறைந்து துர்நாற்றமும் வீசுகின்றது.

இந்தப் பயணிகள் பஸ்தரிப்பு நிலையம் வயலோரத்திற்கு அண்மையில் காணப் படுவதால் விஷ ஜந்துக்களின் நடமாட்டமும் அதிகமாகவே காணப்படுகின்றது.

மழையிலும் வெயிலிலும் பஸ் வரும்வரை ஓய்வுக்காக ஒதுங்கும் பயணிகள் பஸ்தரிப்பு நிலையத்திற்கு வெளியிலேயே காத்திருக்கவேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்துமாறு பயணிகள் கேட்டுள்ளனர்.

# நாடளாவிய ரீதியில் இன்று இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு கல்முனை வர்த்தக சங்கம் ஆதரவு

## சங்கத்தின் செயலாளர் கபீர் அறிவிப்பு

(அம்பாறை நிருபர்)

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்திற்கு எதிராக இன்று இடம்பெறவுள்ள ஹர்த்தாலுடனான பாரிய தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவாக கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்கமும் ஆதரவு நல்குவதாக சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.கபீர் தெரிவித்தார்.

இதன்படி நாடளாவிய ரீதியில் இன்று ஹர்த்தால் மற்றும் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், கல்முனை வர்த்தக சங்கமும் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிலாளர் சங்கத்தின் தலைவரால் எமது சங்கத்திற்கு ஹர்த்தாலை அனுஷ்டிக்கும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய நேற்று (05) எமது கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்கமும் ஒன்றுகூடி ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, எமது பொதுச்சந்தை முற்றாக மூடப்பட்டு ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு வழங்கப்பட தீர்மானித்துள்ளதென தெரிவிக்க விரும்புகின்றேன் - என்றார்.



நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் எதிர்ப்பு நடவடிக்கைக்கமைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் பதவி விலகாத நிலையில் எதிர்வரும் 11ஆம் திகதிமுதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தினை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இன்று முன்னெடுக்கப்படும் ஹர்த்தால் மற்றும் போராட்டங்கள் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் அனைத்து வீடுகள் மற்றும் கட்டடங்களில் கறுப்புக்கொடிகளை ஏற்றுமாறும் ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இதனிடையே நேற்று நள்ளிரவுமுதல் 24 மணிநேர தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக ரயில்வே தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## மூதூர் கடற்கரையோரத்தில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(மூதூர்)

மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள இறால்குழி பாலத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவிலுள்ள கடற்கரையோரத்தில் உயிரிழந்த நிலையில் மிதந்துகொண்டிருந்த மீனவர் ஒருவரின் சடலமொன்று நேற்று முன்தினம் (04) மாலை மீட்கப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மூதூர் - இறால்குழி பகுதியைச் சேர்ந்த சூசப்பிள்ளை ஜெயராம் வயது (25) என பொலிஸார் தெரிவித்தனர்.

கடலுக்கு மீன்பிடிப்பதற்காக கடந்த திங்கட்கிழமை மாலை சென்ற குறித்த இளைஞன் வீடு திரும்பவில்லை. இதனால் அவரது குடும்ப உறவினர்கள் மூதூர் பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (03) முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில், கடலுக்குச் சென்றோர் சடலமொன்று மிதந்துகொண்டிருப்பதைக் கண்டு பொலிஸாருக்கும், கிராம மக்களுக்கும் அறிவித்ததையடுத்து காணாமல்போன இளைஞனின் சடலமென கண்டறியப்பட்டது.

குறித்த சடலமானது உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதோடு, இளைஞன் கொலை செய்யப்படானா அல்லது இயற்கை இறப்பா என்பது இதுவரை கண்டறியப்படாத நிலையில், மூதூர் பொலாஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மருதமுனை ஹிக்மா ஜூனியர் பாடசாலையில் முதலாம் தர மாணவர்கள் வரவேற்கப்பட்டனர்



(பெரியநீலாவணை நிருபர்)

முஸ்லிம் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் தேசிய வேலைத்திட்டம் நேற்று (05) நாடுபூராகவும் நடைபெற்றது. கல்முனை கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் செயற்பாடு நேற்று சுமுகமாக நடைபெற்றது.

மருதமுனை அல்-ஹிக்மா ஜூனியர் பாடசாலையில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் வித்தியாரம்ப விழா பாடசாலையின் அதிபர் எம்.எல்.முஹம்மட் மஹ்ரூப் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.ஜெயந்திமாலா பிரதம அதிதியாக கலந்துகொண்டார். கௌரவ அதிதியாக மருதமுனை ஷம்ஸ் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான் கலந்துகொண்டார்.



தரம் இரண்டு மாணவர்கள் புதிய மாணவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றனர். முதல் நாளான நேற்று தரம் ஒன்று மாணவர்கள் அவர்களுடைய முதல் எழுத்தை அட்டைகளில் எழுதி காட்சிப்படுத்தினார். இதனையடுத்து பாடசாலையில் இணைந்துகொண்ட சகல புதிய மாணவர்களுக்கும் புத்தகப் பை அன்பளிப்பாக வழங்கப்பட்டது

இந்நிகழ்வில் ஷம்ஸ் தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், அபிமானிகள், பெற்றோர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

## நிந்தவூரில் சுயதொழில் உபகரணங்கள் கையளிப்பு



(நிந்தவூர் நிருபர்)

நிதி அமைச்சின் நெறிப்படுத்தலில் சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்களத்தினால் குடும்ப அபிவிருத்தி மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை சுயதொழில் ரீரீதியாக ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுயதொழில் செய்வதற்கான உபகரணங்கள் நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப் தலைமையில் அண்மையில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், சமுதாயம்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்கள், கிராம கணக்குப் பிரிவு உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

## அட்டாளைச்சேனை அல் முனீரா பெண்கள் பாடசாலையில் வித்தியாரம்பம்



(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை அல் முனீரா பெண்கள் பாடசாலையில் வித்தியாரம்ப விழா பிரதி அதிபர் ஓ.எல்.எம்.றிஸ்வான் தலைமையில் நேற்று (05) நடைபெற்றது.

"அகரம் தொடங்கும் ஆனந்த விழா எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட இவ் விழாவுக்கு, அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான், அதிபர் ஏ.சீ.நியாஸ் பிரதம அதிதிகளாகவும், ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல்.மன்சூர், முன்பள்ளி இணைப்பாளர் ஏ.எல்.எம்.யூசுப் ஆகியோரும் கௌரவ அதிதிகளாகவும் பிரதி அதிபர்களான ஏ.கே.எம்.அனிஸ், எம்.ஏ.ஸுஹைறா விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டதுடன் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலத்தில் பாடசாலை உபகரணம் வழங்கும் நிகழ்வு



(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது கமு/கமு/ அல்- ஜலால் வித்தியால மண்டபத்தில்பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் சிறுவர் நிகழ்ச்சிகளும் நேற்று முன்தினம் (04) அனஃபா சமூக சேவை நலன்புரி அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருமாகிய ஏ.முஹம்மட் நளீம் தலைமையில் அதன் நிகழ்கால தலைவர் ஏ.நுஸ்மியா மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் – ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதிப் பொருளாளரும் யஹியாகான் குரூப் நிறுவனத்தின் தவிசாளரும் ஹஸ்மியா முகவர் மற்றும் கானு பிரயாண நிறுவனத்தின் தவிசாளருமாகிய ஏ.சீ. யஹியாகான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கொண்டதுடன், கௌரவ அதிதியாக இலங்கை மின்சார சபை அம்பாறை பிராந்திய மின் பொறியியலாளரும் செஸ்டோ நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவருமாகிய எம்.ஆர்.எம்.பர்ஹான், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.பீ.நவாஸ் மற்றும் கல்முனை மாநகர சபை உறுப்பினர் நஸ்ரின் முர்ஷீத் அமீன், மேலும் அதிதிகளாக கமு/கமு/ அல்-ஜலால் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம்.ஸைபுதீன், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய உத்தியோகத்தர், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் ஏ.சீ.நஜீம், சமுர்த்தி உதவி முகாமையாளர் ஊடகவியலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# இலங்கையை சீனா கைப்பற்றிவிடுமோ என்ற பயம் எனக்குள்ளது

## அருட்தந்தை ஜோன் ஜோசம் மேரி தெரிவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

சீனா திபெத்தைக் கைப்பற்றி பௌத்த மதத்தை எடுத்துக்கொண்டதுபோல் இலங்கையையும் சீனா கைப்பற்றிவிடுமோ என்ற பயம் எனக்குள்ளது. எனவே, எமது நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க இறைவழிபாடே தேவை.

எனது குருத்துவப் பணியில் 54 வருடங்கள் கழிகின்றன. இக்காலத்தில் நான் பல துன்பியல்களையும், பல நல்ல விடயங்களையும் கண்டுள்ளேன். ஈஸ்டர் தின தற்கொலை குண்டுத்தாக்குதலின் பின்னர் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் வீதியில் பேரணியாகச் சென்றார்கள். நாட்டில் எங்கெங்கெல்லாம் அநீதிகள் இடம்பெறுகின்றதோ அதற்கு எதிராக கிறிஸ்தவ மதத் தலைவர்கள் என்ற ரீதியில் குரல் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளளோம்.

எமது நாட்டில் இன்று நேற்றல்ல, பல்லாண்டு காலமாக அரசியல் ரீதியாக பிரச்சினைகள் இருந்துவருகின்றன. வடக்கு, கிழக்கில் மிகவும் மோசமான பிரச்சினைகள் இருந்தன. அப்போதும்கூட அஹிம்சை வழியில் தந்தை செல்வா தலைமையில் சத்தியாக்கிரகப் போராட்டம் செய்தார்கள். 1958ஆம் ஆண்டு மட்டக்களப்பு கச்சேரியில் சத்தியாக்கிரகப் போராட்டம் செய்தவர்களை இராணுவம் இழுத்துக்கொண்டுசென்று ஆலையடி சவக்காலையில் வைத்து அடித்தார்கள் என அருட்தந்தை ஜோன் ஜோசம் மேரி தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்காக மதத்தலைவர்களின் ஆலோசனைகள் எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று (05) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே



அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதும் நாட்டில் அஹிம்சை ரீதியில் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. ஆனாலும் மக்களைத் தொடுவதற்கு பயப்படுகின்றார்கள். மக்களுக்கு ஏதும் செய்தால் உலக நாடுகள் தட்டிக்கேட்டும் என பயப்படுகின்றார்கள். எனவே அன்புதான் நமது அத்திவாரம் ஆனால் அது நடக்கவில்லை. அநீதிகளுக்கு எதிராக எதிர்த்துப்போராட வேண்டும் என்பது எமது திருச்சபையின் கொள்கை தற்போது அதுதான் எமது நாட்டில் நடைபெறுகின்றது. அநீதிகளுக்கு எதிராக மதத் தலைர்வகள் என்ற ரீதியில் நாங்களும். அமைதியான முறையில் அனைவருக்காகவும் குரல்கொடுக்க வேண்டும். தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், கிறிஸ்வர்கள், உள்ளிட்ட அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்தனை செய்துகொண்டு பதாகைகளுடன் வெளியே வந்து அரசுக்குச் சொல்லவேண்டும் இவ்வளவு சொல்லியும், அரசு காதுகேளாதவர்கள்போல், கண்கள் தெரியாதவர்கள்போல், அரசாங்கம் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றது.

இவ்வாறிருக்கின்ற அரசாங்கம் மக்களைத் தாக்கப்போகின்றதா, மக்களின் உரிமைகளைப் பறிக்கப்போகின்றதா என்ற பயம் எனக்குள்ளது. எரிபொருள் இல்லை, உண்பதற்கு ஒன்றுமில்லை, பணமில்லை, இந்நிலையில், நாட்டில் சீனா போன்ற வெளிநாடுகளின் செல்வாக்கும் அதிகரித்துள்ளன.

சீனா திபெத் நாட்டைக் கைப்பற்றி பௌத்த மதத்தை எடுததுக்கொண்டதுபோல் இலங்கையையும் சீனா கைப்பறிவிடுமோ என்ற பயம் எனக்குள்ளது. எனவே, எமது நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க இறைவழிபாடே தேவை என அவர் இதன்போது தெரிவித்தார்.

## கிண்ணியா மத்திய கல்லூரியில் முதலாம்தர மாணவர்களுக்கு வரவேற்பு



(கிண்ணியா நிருபர்)


கிண்ணியா மத்திய கல்லூரியின் முதலாந்தர மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா கல்லூரியின் அதிபர் அனீபா தலைமையில் நேற்று (05) இடம்பெற்றது.

கல்லூரியின் அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் ஆசிரியர் வள நிலைய பொறுப்பதிகாரி நாம்தீன் கலந்து சிறப்பித்தார்.

இதில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



## பொத்துவிலில் கஜமுத்துகளுடன் ஒருவர் கைது





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அறுகம்பை பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் கஜமுத்துக்களை விற்பனை செய்ய முற்பட்ட ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் இரவு (04) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம் (04) இரவு அறுகம்பை டொப் ரென் வீதியிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் விற்பனைக்காக எடுத்து வரப்பட்டபோது குறித்த பகுதியை சுற்றிவளைத்த விசேட அதிரடிப்படையினர் சூட்சுமமான முறையில் சந்தேகநபருடன் உரையாடி கைதுசெய்தனர்.

விசேட அதிரடிப்படையினரின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர, அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர்.சேனாதிராஜா ஆகியோரது அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட கட்டளை அதிகாரி டி.சி.வேவிடவிதான வழிகாட்டலில் பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.சி.டி.ஏ.ரத்நாயக்க தலைமையிலான எச்.பி.ஜீ.கே.நிஸங்க (IP), எஸ்.பி.பாண்டார (SI) உள்ளிட்ட விசேட அதிரடிப்படையினர் இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து யானை கஜ முத்துக்கள் 07, சிற்பி முத்து 06 என்பன மீட்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிண்ணியாவில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பம்



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வயல் நிலங்களில் சிறுபோக விவசாய செய்கைக்கான தயார்படுத்தல் தற்போது இடம்பெற்று வருகின்றது.

இந்நெற்செய்கை விவசாயத்துக்கான வயல் நிலங்களை இயந்திரம் மூலமாக உழுது நெல் விதைப்பும் இடம்பெற்று வருகிறது.

இதில் கல்மெடியாவ வடக்கு, கல்மெடியாவ தெற்கு உட்பட பல வயல் நிலங்களில் விதைப்பும் பதப்படுத்தலும் இடம்பெறுகின்றன.

இம்முறை அப்பகுதியில் குளத்தை நம்பியே விவசாய செய்கை இடம்பெற்றாலும் மனதிருப்தியற்ற நிலை ஏற்பட்டு ஆர்வம் குறைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். பசளை தட்டுப்பாடு யூரியாவின் விலை 45,000 ரூபா வரை விலை ஏற்றம் தங்களை பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சேதனப் பசளை மூலமான கடந்த பெரும்போக நெற்செய்கை வெற்றியளிக்கவில்லை. எனவே அசேதனப் பசளையே தங்களுக்கு மீண்டும் வேண்டும் என்ற கோரிக்கையினையும் முன்வைக்கின்றனர். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உழவுக்கான கூலித் தொகை அதிகரிப்பு, டீசல் பெறுவது கடினம், உள்ளிட்ட பல சவால்களுக்கு மத்தியில் இம்முறை நெற்செய்கையை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

## திருமலையில் எரிபொருளுக்காக சாரதிகள் மீண்டும் நீண்ட வரிசையில் காத்திருப்பு



(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களுக்கும் அதிகமாக எரிபொருள் கொள்வன விற்கு வாடிக்கையாளர்கள் மீண்டும் நீண்ட வரிசையில் காத்திருப்பதை எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது

அதன்படி திருகோணமலை நகரின் பெரும்பாலான எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் கொள்வனவிற்காக நீண்டவரிசையில் பொதுமக்கள் காத்திருக்கின்றனர்.

இவ்வாறு வேலை நாட்கள் மற்றும் பாடசாலை நாட்களில் உரிய முறையில் எரிபொருள் வழங்காமையினால் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் வாகன சாரதிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவித்தனர்.

மேலும் தடையற்ற விதத்தில் பல பௌசர்கள், இராணுவ பாதுகாப்பு கண்காணிப்புடன் விநியோகிக்கப்படுவதாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் எரிசக்தி அமைச்சர் தெரிவித்தபோதிலும், மாவட்டத்தின் பெரும்பாலான எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில், ஒருசில எரிபொருள் நிலையத்தின் ஊடாக எரிபொருள் விநியோகிக்கப்படுவதுடன், அவ்வாறு விநியோகிக்கப்படுகின்ற எரிபொருள் நிலையங்களில் அதிகாலைமுதல் நீண்ட வரிசையில் காத்திருந்து வாடிக்கையாளர்கள் எரிபொருள் கொள்வனவில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புனித மிக்கேல் கல்லூரியில் தரம் 01 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு









(மட்டக்களப்பு நிருபர்)

2022ஆம் ஆண்டு புனித மிக்கேல் கல்லூரியில் தரம் ஒன்றில் கால் தடம்பதிக்கவிருக்கும் மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நேற்று முன்தினம் (04) மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர் பயஸ் ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்விற்கு, பிரதம அதிதியாக புனித மிக்கேல் கல்லூரியின் போசகரும் மட்டக்களப்பு அம்பாறை மறை மாவட்ட ஆயருமான பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை கலந்து சிறப்பித்ததுடன், நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிமனையின் ஆரம்பப் பிரிவிற்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாபதி விவேகாநந்தம் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தார்.

அதிதிகள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்டு, மும்மத இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது.

புனித மிக்கேல் கல்லூரியில் தரம் ஒன்றிற்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களை தரம் இரண்டில் கல்விகற்கும் மாணவர்கள் மலர்மாலை அணிவித்து மகிழ்வுடன் வரவேற்றனர்.

இதன்போது தரம் ஐந்து மாணவர்களின் வரவேற்பு நடனம் உள்ளிட்ட ஏனைய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கை அலங்கரித்ததுடன், பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளின் உரையைத் தொடர்ந்து ஆரம்பப் பிரிவிற்கான கட்டடத் தொகுதிக்கு புதிய மாணவர்களை சிறார்களின் பண்ணாட்டு வாத்திய மரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுக்கான வகுப்பறையில் முதல் நாள் செயற்பாடுகள் ஆரம்பமாகியிருந்தன.

இந்நிகழ்வுகளில் கல்லூரியின் பிரதி அதிபர் அருட்பணி லெபோன் சுதன், ஆரம்பப் பிரிவிற்குப் பொறுப்பான அருட்தந்தை மெல்சன், இயேசு சபைத் துறவி அருட்பணி சுவைக்கின் ரொசான் அடிகளார், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள் என பெருமளவானோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

## திருகோணமலை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபர் கடமைகளை பொறுப்பேற்பு



(திருகோணமலை, கந்தளாய், நிலாவெளி நிருபர்கள்)

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான பி.எச்.என்.ஜயவிக்ரம தமது கடமைகளை இன்று உத்தியோக பூர்வமாக மாவட்ட செயலகத்தில் பொறுப்பேற்றார்.

திருகோணமலை மாவட்டம் என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டமாகும். பல்லினங்கள் மற்றும் பல மொழிகளை பேசும் மக்களை கொண்ட மாவட்டமாகும். நாடு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் தமக்கு இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது. தமக்கு வழங்கப்பட்ட இந்நிமனத்திற்கான பொறுப்புகளை இன, மத, மொழி வேறுபாடின்றி செயலாற்றவுள்ளதாக இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

## ஒய்வூதிய நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிந்தவூரில்

(காரைதீவு நிருபர்)

நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அரசசேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கமு/அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தர தேசிய பாடசாலையின் மர்ஹூம் அஷ்ரப் ஞாபகார்த்த ஆராதனை மண்டபத்தில் அரசசேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் தலைவர் அல்ஹாஜ் எ.எல்.மஹ்றூப் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது பல்கலைக்கழக வைத்திய, பொறியியல் பீடங்களுக்கு தெரிவுசெய்யப்படவுள்ள முதன்மை மாணவ மாணவிகளை பாராட்டிக் கௌரவித்தல், கடந்த ஆண்டு சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் பற்றி ஆராய்தல், நடப்பாண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவுசெய்தல், நடப்பு ஆண்டில் செய்யவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுதல் இடம்பெறவுள்ளது.

மேலும் நிகழ்வில் பிரதம அதிதியாக சட்டத்தரணி எ.எம்.அப்துல் லதீப் (இ.நி.சே.ஜ) பிரதேச செயலாளர் நிந்தவூர் மற்றும் கௌரவ அதிதிகள் ஓய்வுநிலை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.எச்.யாக்கூப், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அல்-ஹாஜ் ஆரிப் சம்சுதீன், ஓய்வுநிலை வைத்திய அதிகாரி தேசமான்ய அல்-ஹாஜ் எ.எம்.ஜாபீர் மற்றும் ஓய்வுபெற்ற அல்- மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை ஸ்தாபக அதிபர் கலாபூசணம் திருமதி எம்.செய்னுலாப்தீன், கல்முனை வலயக்கல்வி முன்பள்ளி ஆரம்ப கல்விப்பணிப்பாளர் அல்-ஹாஜ், எம்.எ.எம்.றசீன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதால் சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் தேசமானி எம்.ஏ.அப்துல் அஸீஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

## போடியார் புலம்பல்!



கல்லில நார் உரிக்கிற மாதிரி சஜீத் தரப்பு அண்ணருக்கும், தம்பிக்கும் எதிராக நம்பிக்கையில்லா பிரேரணைய சபாநாயரிட்ட கொடுத்துப்போட்டாங்க எலுவா.

குடுத்தாலும் அவங்கள கிளப்பிறத்துக்கு நாடாளுமன்றத்தில இருக்கிற எம் பி ஆக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பேரும் சம்மதிக்க மாட்டாங்க..

இதுவும் காலத்த கடத்தி இழுத்தடிக்கிற காரியம்தான் முடியும் நான் சொன்னது சரி எலுவா?

## ரஹ்மத் பவுண்டேஷனினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு




(எம்.என்.எம்.அப்ராஸ்)

அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்களுக்கும் ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் மூலம் பல மனிதநேயப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் கல்முனை பிராந்தியத்தில் அடையாளப்படுத்தப்பட்ட விசேட தேவையுடையவர்கள் பெண்கள் தலைமைத்துவம் தாங்கும் குடும்பங்கள், வருமானம் குறைந்தவர்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கல்முனையில் ரஹ்மத் பவுண்டேஷன் காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வானது ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் நேரடி கண்காணிப்பிலும் Y.W.M.A. பேரவையின் ஒருங்கிணைப்பிலும் கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் நடைபெற்றது.

## நாவற்காடு வித்தியாலய மாணவனின் மருத்துவ சிகிச்சைக்காக நிதியுதவி!

### தமிழ் மக்கள் இளைஞர் அணியினர் அன்பளிப்பு



(மட்டக்களப்பு, கல்லடி நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்டம் நாவற்காடு கலைமகள் கனிஸ்ட பாடசாலையில் கல்வி பயிலும் மாணவன் ஒருவருக்கு தனது கால்களில் ஏற்பட்ட சுகயினத்தி இந்தியா சென்று சிகிச்சை பெறுவதற்காக தமது பங்களிப்பாக தமிழ் மக்கள் இளைஞர் அணியினரால் ஒரு இலட்சம் ரூபா நிதி உதவியினை நேற்று முன்தினம் (04) வழங்கிவைத்தனர்.

அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எஸ்.நிரோஜன் தலைமையில் மட்டக்களப்பு நாவற்காடு கலைமகள் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வித்தியாலய அதிபர் மு.சிறிதரன், அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள், மாணவனின் தாயார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கடந்த சில மாதங்களாக குறித்த மாணவனுக்கு காலில் ஏற்பட்ட திடீர் சுகயீனத்தால் இருகால்களும் இயங்காமல் போயுள்ளது.

இதற்கு இந்தியாவில் சிகிச்சைபெறும் வகையில் இலங்கையிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் உள்ள தமிழ் மக்கள் இளைஞர் அணியினரால் இந் நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மழைவீழ்ச்சி இல்லாவிட்டால் ஐந்து மணிநேர மின்வெட்டு!

நாட்டில் மழை பெய்யாத பட்சத்தில் நாளாந்தம் ஐந்து மணித்தியால மின்வெட்டு ஏற்படக்கூடும் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

சமனலவெவ மற்றும் லக்ஷபான நீர்த்தேக்கங்களின் ஊடாக நீர் மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதாக தலைவர் அனில் ரஞ்சித் இந்துவர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மழை பெய்யாதது பெரும் கவலைக்குரிய நிலைமையாகும். நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலைமையின் காரணமாக நீர்மின் உற்பத்தியை வலுப்படுத்தவேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

நீர்மின் உற்பத்தியை உறுதி செய்ய முடியாவிட்டால் ஐந்து மணி நேர மின்வெட்டு விதிக்கப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார்.




# எயார்லைன்ஸ் நிறுவன விமானக் கொள்வனவு நிறுத்தம்!

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு புதிய விமானங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பான அறிவித்தலை நாடாளுமன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் இந்த விமானக் கொள்வனவுகளை மேற்கொள்ளக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உட்பட்ட பலரும் கோரிக்கையை விடுத்து வந்தனர்.

இதனையடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற கோப் குழுவின் தலைவர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

# மூன்று மாதங்களில் மக்கள் வறுமையால் உயிரிழக்கலாம்!

## மஹிந்த அமரவீர பகிரங்க அறிவிப்பு

தற்போதுள்ள நிலை நீடிக்குமாக இருந்தால் இன்னும் மூன்று மாதங்களின் பின்னர் மக்கள் உயிரிழக்கும் நிலை உருவாகுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள போட்டியிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது எதிர்நோக்கியுள்ள நிலைமை சம்பந்தமாக பல சந்தர்ப்பங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எச்சரிக்கை விடுத்திருந்தது. அந்த எச்சரிக்கையை எவரும் கவனத்தில் கொள்ளாது, எமது கட்சியை அவமதிக்கும் வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிலர் நடந்து கொண்டனர்.

எதிர்வரும் காலங்களில் எரிபொருள் கிடைக்காமல் போகலாம். சமையல் எரிவாயு கிடைக்காமல் போகலாம். மின் கட்டணத்தை பெருமளவில் அதிகரிக்க வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மின் கட்டணம் அதிகரிக்கும் போது குடி நீர் கட்டணமும் அதிகரிக்கும். மீண்டும் எரிபொருள் விலை அதிகரிப்பை பற்றி பேசுகின்றனர். எரிவாயுவின் விலையை மீண்டும் அதிகரிப்பது பற்றியும் பேசுகின்றனர்.

இவ்வாறு அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்து மக்கள் சாப்பிட உணவின்றி இறந்து போகலாம். உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு எதிர்காலத்தில் பலர் இறந்து போகக்கூடும்.

ராஜபக்ஷ அரசாங்கம் கொள்வனவு நடவடிக்கைகளுக்குப் புறம்பாக ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அந்த சந்தர்ப்பத்தில் அவற்றுக்கு எதிராக குரல் கொடுத்திருந்தால், ஒரு வேளை நான் உயிருடன் இருந்திருக்க வாய்ப்பிருக்காது.

அதேவேளை, சர்வகட்சி நிர்வாகம் ஒன்றை உருவாக்குவதே நாட்டில் தற்போது



ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு ஒரே தீர்வு.

நாட்டின் உள்நாட்டு நெருக்கடிக்கு தீர்வுகாண சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை அமைக்க மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்கவில்லை என்றால், எமது கட்சியும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துடன் எந்த இணக்கப்பாட்டுக்கும் வராது எனவும் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

# மாலி அமைதிகாப்பு பணிகளுக்கான 4ஆவது படைக்குழுவினர் புறப்பட்டுச்செல்ல தயார்





மேற்கு ஆபிரிக்க நாடான மாலி இராஜ்ஜியத்தில் ஐ.நா. அமைதிகாக்கும் பணிகளுக்காக புறப்பட்டுச் செல்லவிருக்கும் இராணுவ வீரர்களினால் சம்பிரதாயபூர்வமாக இராணுவத் தளபதிக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் (04) குருவிட்ட கெமுனு ஹேவா படையணியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

243 பேரைக் கொண்ட இக்குழுவில் கெமுனு ஹேவா படையணியினர் அதிகளவில் உள்ளடங்கியிருப்பதோடு, இலங்கை கவச வாகனப் படையணி, இலங்கை பொறியியல் சேவை படையணி, இலங்கை சமிக்ஞை படையணி, மின்சார மற்றும் இயந்திர பொறியியல் படையணி, பொறியியல் சேவை படையணி, இலங்கை இராணுவ சேவைப் படையணி, இலங்கை இராணுவ போர்க் கருவிகள் படையணி, இலங்கை மின்சார மற்றும் இயந்திர பொறியியல் படையணி, இலங்கை இராணுவ பொலிஸ் படையணி, இலங்கை இராணுவ வைத்திய படையணி மற்றும் இலங்கை இராணுவ பொதுச் சேவை படையணி ஆகியவற்றின் சிப்பாய்களும் உள்ளடங்கியுள்ளனர்.

இவர்களில் 20 அதிகாரிகளும் 208 படையினரும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி வீரர்களுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்ட பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா, ஒழுக்க நெறிமுறைகளுக்கமைய செயற்படுமாறு அறிவுரை வழங்கியிருந்ததோடு, வெளிநாட்டு வருவாயை ஈட்டித்தருவதற்கு அவர்கள் கொண்டுள்ள இயலுமைக்கும் பாராட்டு தெரிவித்தார்.

# மொங்கோலியா தூதுவரின் நற்சான்றிதழ்கள் கையளிப்பு



மொங்கோலியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர் கலாநிதி. பாலித கோஹோனா, அண்மையில் மொங்கோலியாவின் ஜனாதிபதி குரேல்சுக் உக்னாவிடம் தனது நற்சான்றிதழ் கடிதத்தை கையளித்தார்.

நற்சான்றிதழ் வழங்கும் விழா அரச இல்லத்தில் நடைபெற்றதுடன், தூதுவர் கலாநிதி பாலித கொஹொனா அரச மரியாதை அணிவகுப்பையும் பார்வையிட்டார். ஜனாதிபதி குரேல்சுக் உக்னாவுடன் சந்திப்பொன்றிலும் ஈடுபட்டார். இந்த சந்திப்பில், தூதுவர், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அன்பான வாழ்த்துகளை மங்கோலிய ஜனாதிபதிக்குத் தெரிவித்ததுடன், பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டவுடன் இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கும் முன்மொழிவை முன்வைத்தார்.

தூதுவர் கொஹொன, ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தின் பிரதி அமைச்சர் மற்றும் பணிப்பாளர் ஆகியோரையும் சந்தித்து, அப்பா ஹம்பா லாமா (உலான் படாரில் உள்ள ஆலயத்தின் பிரதித் தலைவர்) மற்றும் வர்த்தக சபையின் தலைவர் ஆகியோரை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

தென்கிழக்கு ஆசியாவிற்கு அடிக்கடி பயணம் செய்யும் மொங்கோலிய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்ப்பதன் அவசியம் குறித்தும், நடுத்தர வர்க்கத்தினரிடையே நாகரீகமான பானமாக தேநீர் மாறி வருவதால் நாட்டிற்கான தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் தூதுவர் கலந்துரையாடினார். உலான் பாடரில் சிலோன் டீயை (நைரா) விற்பனை செய்யும் இலங்கைத் தேயிலை விநியோகஸ்தரையும் தூதுவர் சந்தித்தார்.



சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 19 இந்திய மீனவர்கள் நேற்று (05) இலங்கையிலிருந்து சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

# இந்தியாவிடமிருந்து மேலுமொரு தொகை எரிபொருள்

உதவித் திட்டத்தின் கீழ் இந்தியாவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேலுமொரு தொகை எரிபொருள் நேற்று முன்தினம் (04) நாட்டை வந்தடைந்துள்ளது.

அதற்கமைய, கிட்டத்தட்ட 40 ஆயிரம் மெட்ரிக்தொன் பெற்றோல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்த எரிபொருள் தொகையுடன் கிட்டத்தட்ட 4 இலட்சத்து 40 ஆயிரம் மெட்ரிக்தொன் பல்வேறு வகையான எரிபொருளை இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றுள்ளது.




# யாழிலிருந்து நடைபயணமாக செல்லும் நேபாளப் பிரஜை

யாழ்ப்பாணத்திலிருந்து நடைபயணமாக மாத்தறை நோக்கி பயணிக்கும் நேபாளத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஐ பஹதூர் என்பவர் நேற்று முன்தினம் (04) காலை மீகஹகியுலாவை சென்றடைந்தார்.

இந்த நடைபயணத்தை இலங்கையில் மேற்கொள்ள வேண்டுமென்ற ஆசை தனக்குள் இருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

'JAFNA TO MATHARA WALKIN' என பெயரிடப்பட்ட அவரது நடைபயணம், ஏப்ரல் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பித்தது. தற்போது 19 நாட்களாக நடந்து வருவதாகவும் பஹதூர் கூறினார்.

நேபாளத்தின் காத்மண்டுவிலிருந்து, இந்தியாவிலுள்ள பெங்களூருக்கு கால்நடையாகவும், பெங்களூரிலிருந்து கொழும்புக்கு விமானம் மூலமாகவும், பின்னர் ரயில் மற்றும் பஸ் மூலம் யாழ்ப்பாணம் சென்றதாகவும் கூறினார்.



யாழ்ப்பாணத்தில் இருந்து மாத்தறைக்கு நடந்து சென்று பல்வேறு மொழி பேசும் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களைச் சந்தித்து அவர்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள் குறித்து ஆய்வு செய்வதே தனது நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

# கனடாவில் பெருமளவு போதைப்பொருட்களுடன் இரு தமிழர்கள் உள்ளிட்ட மூவர் கைது

கனடா – கவர்தா லேக்ஸ் (Kawartha Lakes) நகரில் 6 மில்லியன் டொலருக்கும் அதிகமான சட்டவிரோத கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து, சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் இருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்று மூன்று குடியிருப்புகள் உட்பட இரண்டு வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள மூவருக்கு எதிராக 13 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், சந்தேகநபர்கள் எதிர்வரும் 19ஆம் திகதி ஓஷாவா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



60 வயதான தோமஸ் குரேலி, 26 வயதான கபிலன் அனுர மற்றும் 27 வயதான தனோஜா தர்மகுலசேகரம் என்பவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் குரேலி மற்றும் கபிலன் ஆகியோருக்கு எதிராக அதிகளவான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தல் நோக்கத்திற்காக அவர்கள் இந்தப் பொருளை வைத்திருந்ததாகவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும்ள கடா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையிடமிருந்து 99 ஆண்டுகள் குத்தகையில் கச்சதீவை பெற இந்திய மத்திய அரசு திட்டம்



இலங்கையிடமிருந்து கச்சதீவை 99 ஆண்டுகள் குத்தகைக்குப் பெற, மத்திய அரசு திட்டமிட்டுள்ள தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், ஏப்ரல் 29ஆம் திகதி இலங்கைக்கு வந்த தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, நான்கு நாட்கள் பயணத்தை முடித்து, நேற்றுமுன்தினம் சென்னைக்குத் திரும்பினார்.

அண்ணாமலை இந்திய அரசின் பிரதிநிதியாக இலங்கைக்கு வராவிட்டாலும், அவரை இந்தியப் பிரதமர் மோடியின் பிரதிநிதியாகவே கருதி, இலங்கை அரசும், தமிழர்களும் பெரும் வரவேற்பும், முக்கியத்துவமும் அளித்தனர். அவர் இலங்கை வருவதற்கு முன்னர், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்ஷங்கர், பா.ஜ.க, தேசிய தலைவர் நட்டா ஆகியோரிடம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்நிலையில், இலங்கையில் இருந்தவாறு நட்டாவிடம் தொலைபேசியில் பேசிய அண்ணாமலை,

''இலங்கைத் தமிழர்கள், தமிழகத்திலுள்ள தமிழர்கள் மட்டுமல்லாது உலகம் முழுதும் உள்ள தமிழர்களிடம் பெரும் செல்வாக்கை பெறவேண்டுமானால், கச்சதீவை 99 ஆண்டுகள் குத்தகைக்குப் பெற வேண்டும்.

தமிழகம் - இலங்கை இடையே கடல்வழி போக்குவரத்தை ஆரம்பிக்க வேண்டுமென ஆலோசனை கூறியுள்ளதாக பா.ஜ.கவினர் தெரிவிக்கின்றனர். கடந்த 1974இல் கச்சதீவை இந்திரா காந்தி தாரைவார்த்தபோது, நாடாளுமன்றத்தில் வாஜ்பாய் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததையும், பா.ஜ.க. முன்னாள் தேசிய தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி வழக்கு தொடர்ந்ததையும், நட்டாவிடம் அண்ணாமலை சுட்டிக்காட்டியுள்ளார்.

அதைத் தொடர்ந்து, இலங்கையுடன் பேசியுள்ள வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷங்கர், கச்சதீவு பிரச்சினை குறித்து முக்கியமாக விவாதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கச்சதீவை குத்தகைக்கு இந்தியா பெற்றால், அது பா.ஜ.க. அரசின் சாதனையாக மட்டுமல்லாது, அண்ணாமலையின் இலங்கை பயணத்திற்கு கிடைத்த வெற்றியாகவும் பார்க்கப்படும் என்கின்றனர் தமிழக பா.ஜ.கவினர்.

## உலக செய்திகள்

## ம.தி.மு.க. சார்பில் இலங்கைக்கு ரூ. 13.15 இலட்சம்

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவும் வகையில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ரூ.13.15 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

இது அக்கட்சி சார்பில் வெளியான செய்திக் குறிப்பில்: "கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி உணவு மட்டும் அடிப்படைத் தேவைப் பொருட்கள் கிடைக்காமல் பரிதவிக்கின்ற இலங்கை மக்களுக்கு, தமிழக அரசு சார்பில் மனிதாபிமான அடிப்படையில் நிதி மற்றும் பொருள் உதவி அளிப்பது என முதலமைச்சர் அறிவித்திருந்தார். தாராளமாக உதவும்படி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

அவரது வேண்டுகோளை ஏற்று, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ரூபா 13 இலட்சத்து 15 ஆயிரம் வழங்கப்பட்டது.

தமிழக அரசு தலைமைச் செயலகம் புனித ஜோர்ஜ் கோட்டையில் முதலமைச்சர் ஸ்டாலினை மறுமலர்ச்சி திமுக பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்ட குழுவினர் சந்தித்து நிவாரண நிதியை வழங்கினர்.

## போர் நடைபெறும் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற கூடுதலாக மனிதாபிமான பாதைகளை அமைக்க வேண்டும்

### ஐ.நா. பொதுச் செயலாளர் வலியுறுத்து



உக்ரைனில் போர் நடைபெறும் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற கூடுதலாக மனிதாபிமான பாதைகளை அமைக்க வேண்டுமென ஐ.நா. பொதுச் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யப் படைகளால் முற்றுகையிடப்பட்ட மரியுபோல் நகரிலுள்ள அசோவ்ஸ்டல் உருக்காலையில் சிக்கியிருந்த சுமார் 100 உக்ரைனியர்கள், பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

அந்த உருக்காலையை சுற்றியுள்ள பகுதிகளில் மேலும் பலர் சிக்கியுள்ளதாக செஞ்சிலுவை சங்கமும், ஐக்கிய நாடுகள் சபையும் தெரிவித்திருந்தன.

இந்நிலையில், அசோவ்ஸ்டல் உருக்காலையிலிருந்து மக்களை வெளியேற அனுமதித்ததுபோல், மேலும் பல மனிதாபிமான பாதைகளை அமைத்து மக்கள் பாதுகாப்பாக வெளியேற இருநாட்டு தலைமைகளும் ஏற்பாடு செய்ய வேண்டுமென ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

**மரியுபோலிலிருந்து 344 பேர் மீட்பு**

இந்நிலையில், மரியுபோல் நகரிலிருந்து வெளியேற்றப் பட்ட 300இற்கும் மேற்பட்ட உக்ரைனியர்கள் சபோரிஜியா நகருக்கு அழைத்துச் செல்லப்படுவதாக அந்நாட்டு ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் படைகளால் முற்றுகையிடப்பட்ட மரியுபோலிலுள்ள அஸோவ்ஸ்டால் உருக்காலையில் பதுங்கியிருந்த 344 பொதுமக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

அங்கு மேலும் பலர் சிக்கியிருப்பதாக கூறப்படும் நிலையில், மீட்கப்பட்டவர்கள் உக்ரைனின் கட்டுப்பாட்டிலுள்ள சபோரிஜியா நகருக்கு அழைத்துச் செல்லப்படுவதாக ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் எனவும் நாட்டு மக்களிடம் நிகழ்த்திய உரையில் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.



பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ள இலங்கைக்கு உதவும் வகையில் தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் ஒரு கோடி ரூபா நிதிக்கான காசோலையை பொருளாளர் டி.ஆர்.பாலு வழங்கியபோது... (திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

## உகண்டா பஸ் விபத்து: 20 பேர் பரிதாபப் பலி!



உகண்டாவில் கட்டுப்பாட்டை இழந்து பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதில் 20 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

போர்ட் போர்டல் நகரிலிருந்து அந்நாட்டின் தலைநகர் கம்போலாவுக்கு 30இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் பஸ்ஸொன்று சென்றுள்ளது.

போர்ட் போர்டல் நகருக்கு அருகே திடீரென கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியோரத்திலிருந்த தேயிலை தோட்டத்துக்குள் பாய்ந்து பலமுறை உருண்டு விபத்துக்குள்ளானது.

இந்த கோர பஸ் விபத்தில் 20 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும், 13 பேர் பலத்த காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கொங்கோவை மீண்டும் அச்சுறுத்தும் எபோலா



கொங்கோவில் மீண்டும் எபோலா வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து தடுப்பு நடவடிக்கையில் கொங்கோ அரசு ஈடுபட்டுள்ளது.

கொங்கோவின் ஈக்வடோர் மாகாணத்தில் பண்டகா பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி ஒருவருக்கு எபோலா வைரஸ் உறுதிசெய்யப்பட்டுள்ளது. எபோலா தாக்கிய நபர் ஏப்ரல் 21ஆம் திகதி உயிரிழந்தார். இதனை கொங்கோவின் சுகாதாரத்துறை அமைச்சு உறுதிசெய்துள்ளது. எபோலாவால் உயிரிழந்தவருடன் தொடர்பில் இருந்த 267 பேர் கண்டறிந்துள்ளனர்.

தொடர்ந்து அவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கு தடுப்பூசிகளையும் கொங்கோ அரசு செலுத்தி வருகின்றது.

1976ஆம் ஆண்டு எபோலா நதிக்கரை யோர கிராமத்தில் கண்டறியப்பட்டதால் அந்த வைரஸுக்கு எபோலா அப்பெயர் வழங்கப்பட்டது. வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டு 40 ஆண்டுகள் கடந்துவிட்டன. எனினும், இதுவரை 15,000 பேர் இந்நோய்க்கு உயிரிழந்துள்ளனர். எபோலா பாதித்தால் காய்ச்சல், வாந்தி, இரத்தப்போக்கு, வயிற்றோட்டம் ஏற்பட்டு, 2013 முதல் 2016 வரை மேற்கு ஆபிரிக்காவில் சுமார் 11,000 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## "கொலை ஆதாரத்தை குரங்கு தூக்கிச் சென்றுவிட்டது சார்"

### நீதிமன்றத்தில் காரணம் சொன்ன பொலிஸார்; ராஜஸ்தானில் சம்பவம்

கொலை வழக்கு என்றாலே ஆதாரங்கள்தான் முக்கிய பங்கு வகிக்கின்றன. அப்படியான ஆதாரங்கள் இல்லையெனில் சரியான நீதி கிடைக்காமல் போகவும் வாய்ப்புள்ளது. இந்நிலையில், ராஜஸ்தானில் கொலை வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆதாரங்களை குரங்கு தூக்கி சென்றுவிட்டதாக பொலிஸாரே தெரிவித்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



கடந்த 2016ஆம் ஆண்டு செப்டெம்பரில் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரிலுள்ள சந்த்வாஜி பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதியில் சுஷிகாந்த் சர்மா என்ற இளைஞர் காணாமல் போயுள்ளார். இது தொடர்பாக பொலிஸார் தேடிவந்த நிலையில், குறித்த இளைஞன் மர்ம நபர்களால் கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார். எனவே, கொலை வழக்காக பதிவுசெய்த பொலிஸார் சந்த்வாஜி பகுதியில் வசிக்கும் ராகுல் கண்டேரா மற்றும் மோகன்லால் கண்டேரா ஆகியோரை 5 நாட்களுக்கு பின்னர் கைதுசெய்தனர். அவர்களிடம் தொடர் விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார், கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கத்தி உள்ளிட்ட 15 வகையான ஆதாரங்களை கைப்பற்றி ஒரு பையில் சேகரித்தனர்.

அந்த பையை அஜாக்கிரதையாக பொலிஸ் ஸ்டேஷன் அருகேயுள்ள மரத்தடியில் வைத்துள்ளனர். இந்த பைதான் தற்போது பொலிஸாருக்கும் பெரும் தலைவலியாக மாறியது. இந்த வழக்கை விசாரித்த மாவட்ட நீதிமன்றம், ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு கோரியது. அப்போது, ஆதாரங்கள் அடங்கிய பையை குரங்கொன்று தூக்கிச் சென்றதாக பொலிஸார் தகவல் தெரிவித்தனர். இதில் அதிர்ச்சியடைந்த நீதிபதிகள், எழுத்துப்பூர்வமாக விளக்கமளிக்க உத்தரவிட்டது.

இதனையடுத்து, ஆதாரங்களை குரங்கு தூக்கிச் சென்றதாக பொலிஸார் எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்தனர். பொலிஸாரின் அஜாக்கிரதையை கண்டித்த நீதிபதிகள், ஆதாரங்களை எப்படியாவது திரும்பப்பெற வேண்டுமென உத்தரவிட்டனர்.

## கண்ணிவெடியால் கால்களை இழந்த காதலி; வைத்தியசாலையிலேயே கரம்பற்றிய காதலன்



உக்ரைன் போரில் இரண்டு கால்களையும் இழந்த காதலியை வைத்தியசாலையில் வைத்து திருமணம் செய்துகொண்ட காதலன், அவரை குழந்தையைபோல் தூக்கி வைத்துக் கொண்டு நடனமாடிய வீடியோ இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

லூஹான்ஸ்க் பகுதியைச் சேர்ந்த செவிலியரான ஒக்ஸானா (Oksana) தனது காதலன் விக்டருடன் நடந்து சென்றுகொண்டிருந்த போது, கண்ணிவெடியில் கால் வைத்ததால் தனது இரண்டு கால்களையும் இழந்ததோடு, இடது கையில் நான்கு விரல்களையும் பறிகொடுத்தார்.

லிவிவ் நகரிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஒக்ஸானா ஓரளவுக்கு உடல்நலம் தேறியதையடுத்து, அவரது காதலன் விக்டர் வைத்தியசாலையின் அறுவை சிகிச்சை மையத்தில் வைத்தே ஒக்ஸானாவை திருமணம் செய்துகொண்டார்.

மோதிரம் மாற்றி காதலியை மணந்துகொண்ட விக்டர், முத்தமிட்டு அன்பை பரிமாறிக்கொண்டதோடு, குழந்தையைபோல் காதலியை கையில் தூக்கி வைத்துக்கொண்டு நடனமாடினார்.

## 6 மாதங்களில் ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் இறக்குமதியை நிறுத்தவேண்டும்

### ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் தெரிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகள், ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதை 6 மாதங்களுக்குள் நிறுத்த வேண்டும் - என அதன் தலைவர் உர்சுலா வான் டெர் (Ursula von der) தெரிவித்துள்ளார்.

பல ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிலிருந்து கடல் வழியாகவும், குழாய் மூலமாகவும் மசகு எண்ணெயை இறக்குமதிசெய்து வருகின்றன. ரஷ்யாவிடமிருந்து நிலக்கரி இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டுள்ள நிலையில், கூடுதல் தடைகள் விதிப்பது குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் பேசிய உர்சுலா வான் டெர் (Ursula von der), ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதை 6 மாதத்திலும், பெற்றோல், டீசல், எல்.பி.ஜி. இறக்குமதி செய்வதை ஆண்டு இறுதிக்குள்ளும் நிறுத்த வேண்டும் என முன்மொழிந்தார். சில நாடுகள் தங்கள் எண்ணெய் தேவைகளுக்கு ரஷ்யாவை முழுவதுமாக சார்ந்துள்ளதால், இது பெரும் விவாதப் பொருளாகியுள்ளது.

## துடைப்பத்தை சாக்கடையில் நனைத்து அடித்தால் குடும்பத்தில் சந்தோஷம் மலருமாம்



தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே மறவபட்டி கிராமத்தில் முத்தாலம்மன் கோயில் சித்திரை திருவிழாவின் கடைசி நாளான நேற்று ஒருவருக்கொருவர் துடைப்பத்தால் அடித்துக்கொள்ளும் விநோத நிகழ்ச்சி நடைபெற்றது. கிராமத்திலுள்ள மாமன், மைத்துனர்கள் மாறி மாறி துடைப்பத்தால் அடித்துக்கொண்டனர்.

அடிப்பதற்கு முன்பாக துடைப்பத்தை சாக்கடை நீரிலும், சேறு மற்றும் சகதியிலும் நனைத்துக்கொண்டு ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டனர். மேலும் சிலர் சேற்றிலும், சகதியிலும் படுத்துக்கொண்டு தங்கள் உறவினர்களிடம் துடைப்பத்தால் அடிவாங்கினர்.

இந்த விநோத திருவிழாவை சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான மக்கள் திரண்டுவந்து பார்த்தனர். துடைப்பத்தை சாக்கடையில் நனைத்து தாக்கிக்கொள்வதால் குடும்பத்தில் சந்தோஷம் நிலவும் என்றும், பிரிந்த உறவுகள் மீண்டும் மலரும் என்றும் கிராம மக்கள் நம்புகின்றனர்.

# கிரிக்கெட் வீரரை மிரட்டிய ஊடகருக்கு இரு ஆண்டுகள் தடை!

இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர் விருத்திமான் சாஹா, இந்திய அணிக்காக டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் மட்டும் கடந்த சில ஆண்டுகளாக விக்கெட் கீப்பராக செயற்பட்டு வந்தார். அண்மையில் நடைபெற்ற இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இவர் தெரிவுசெய்யப்படவில்லை.

இந்நிலையில், அவரை வட்ஸ்அப் மூலம் தொடர்புகொண்ட விளையாட்டு ஊடகவியலாளர் போரியா மஜூம்தார் குறுஞ்செய்தியின் மூலம் கேலி செய்தி மிரட்டியதாக சஹா குற்றசாட்டை முன்வைத்தார். இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையானது விருத்திமான் சாஹாவிடம் முழுமையான விசாரணை நடத்தியது. இந்த விசாரணை குறித்து பேசிய சாஹா, "எனக்குத் தெரிந்த அனைத்தையும் நான் குழுவின் முன் கூறிவிட்டேன். அந்த ஊடகர் குறித்த விவரத்தையும் தெரிவித்துவிட்டேன். ஆனால், இந்த விசாரணை முடியும் வரை இது குறித்து எதுவும் பேசவேண்டாமென பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது" என தெரிவித்தார்.





பின்னர் போரியா மஜூம்தார் என்ற அந்த பத்திரிகையாளர் தானாக முன்வந்து சாஹா உடன் நடந்த உரையாடல் குறித்து விளக்கம் அளித்திருந்தார். இந்நிலையில், இந்த புகார் குறித்து விசாரித்த பி.சி.சி.ஐ. போரியா மஜூம்தார்க்கு 2 ஆண்டுகள் தடை விதித்துள்ளது. அவரால் ஊடகவியலாளர் சந்திப்பு, வீரர்களிடம் நேர்காணல் உள்ளிட்டவற்றில் கலந்துகொள்ள முடியாது என்றும் கூறியுள்ளது.




# ஐந்து ஆண்டுகளின் பின் மீண்டும் முதலிடத்தில் ஆஸி.

சர்வதேச கிரிக்கெட் பேரவையானது வருடாந்த அணிகளின் தரவரிசை பட்டியலை வெளியிட்டதற்கமைய டெஸ்ட் தரவரிசையில் அவுஸ்திரேலிய அணி 119 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதன்மூலம் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவுஸ்திரேலிய அணி இவ்வாறு மீண்டும் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தை கைப்பற்றியுள்ளது.

பெட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஆஷஸ் தொடரை 4 - 0 என்ற கணக்கில் வெற்றிகொண்டது. அதனைத் தொடர்ந்து பாகிஸ்தானை 1-0 என வீழ்த்தி டெஸ்ட் தொடரை வென்றது. இதனால் டெஸ்ட் தரவரிசையிலும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலிலும் அவுஸ்திரேலிய அணி முதலிடத்திற்கு முன்னேறியது.

2019 மே மாதம் முதல் நடைபெற்ற டெஸ்ட் தொடர்களின் அடிப்படையில் இந்தப் புதிய தரவரிசை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒருநாள் அணிகளின் தரவரிசையில் கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணி 125 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இதேவேளை, இருபதுக்கு 20 அணிகளுக்கான தரவரிசையில் இந்திய அணி 270 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.

# லங்கா ப்ரீமியர் லீக்கிற்கு புதிய பணிப்பாளர் நியமனம்



இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற எல்.பி.எல். தொடரின் புதிய பணிப்பாளராக சமந்த தொடன்வெல நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரு வருடங்களாக எல்.பி.எல். பணிப்பாளராக செயற்பட்டுவந்த இலங்கை கிரிக்கெட் சபையின் உதவித் தலைவர் ரவின் விக்ரமரட்ன, அப்பதவியிலிருந்து விலகிக்கொண்டதை அடுத்தே புதிய பணிப்பாளராக சமந்த தொடன்வெல நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2020, 2021 ஆகிய வருடங்களில் முதல் இரு எல்.பி.எல். தொடர்களை வெற்றிகரமாக நடத்திய பெருமை ரவின் விக்ரமரட்னவை சேர்கின்றது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com




இலங்கை கூடைப்பந்து சம்மேளன அரங்கில் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற *Red Bull Half Court* கூடைப்பந்து சுற்றுப்போட்டியில் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் 20 அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 400ற்கும் அதிகமான வீரர்கள் பங்கேற்றிருந்தனர். இதில் வெற்றிபெற்றவர்கள் எகிப்தில் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள உலகச் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளனர்.

# டபிள்யூ.டபிள்யு.ஈயில் மிரட்டும் இந்தியர்

(அக்ஷரா)

தொலைக்காட்சி ரசிகர்களின் விருப்ப நிகழ்ச்சிகளில் ஒன்றான டபிள்யு.டபிள்யு.ஈயில் இந்தியரான வீர் மஹான் அசத்தி வருகிறார். கிரேட் காளிக்கு பின் மஹான் கவனம் பெற்றுள்ளார்.

அண்டர்டேக்கர், ஜோன் சீனா, எட்ஜ், கேன், ரோமன் ரெய்ன்ஸ் என்று பல சுப்பர் ஸ்டார்கள் தொடர்ந்தவண்ணம்தான் இருக்கிறார்கள். புதிய சுப்பர் ஸ்டார்கள் வர வர புதிய ரசிகர்களும் வந்தவண்ணம் உள்ளனர். புதிய வரவுதான் வீர் மஹான்.

முகத்தில் பாதி மறைத்தபடி தாடி, நீளமான முடி, நெற்றி முழுக்க பட்டை என்று பார்க்கவே தெய்வீகமாக இருக்கும். இவர் ரிங்கில் இறங்கினால் டான்ஸ் ரோஸ் அல்ல வீறு கொண்ட புலி மாதிரி பாய்வார். 2018இல் தான் வீர் மஹான் டபிள்யு.டபிள்யு.ஈ. உலகிற்குள் ஒப்பந்தம் செய்யப்பட்டார். அப்போது இன்னொரு இந்தியரான சவுரவ் குஜ்ரார் உடன் அவர் இணைந்து ஆடினார். தி இண்டஸ் ஸ்டார் என்ற பெயரில் இவர்கள் சிறப்பாக ஆடி வந்தனர். இவர்கள் இருவரும் 2020ல் என்.எக்ஸ்.டி. குழுவிற்குள் சென்றனர். அங்கு இவர்களின் ஆட்டம் கவனிக்கப்பட்டது.

அதன்பின் வரிசையாக 10இற்கும் மேற்பட்ட ஆட்டங்களில் இவர் வெற்றிபெற்றார். இதனால் 2021இல் இவரை டபிள்யு.டபிள்யு.ஈ ரோ ஒப்பந்தம் செய்தது. தன்னைத்தானே லயன் என்று அழைத்துக்கொள்ளும் வீர் மஹான் டபிள்யு.டபிள்யு.ஈ ரோவில் வரிசையாக வெற்றிகளை குவித்தார். முதல் போட்டியிலேயே ரே மிஸ்டேரியோவை வென்றுவிட்டு இவர் கொடுத்த ரியாக்சன் எல்லாம் காட்டுத்தனம். தற்போது ரோமன் ரெய்ன்ஸ், பிராக் லெஸ்னர் போன்றவர்களுடன் வரும் நாட்களில் இவர் மோதவிருக்கிறார்.



# பெருநாளை முன்னிட்டு கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஏற்பாடு

(பெரியநீலாவணை நிருபர்)

நோன்புப் பெருநாளை முன்னிட்டு மருதமுனை ரெட் விங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் சமாதான வெற்றிக்கிண்ணம் - 2022 கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று, நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய தினங்களில் கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அணிக்கு ஆறு பேர் ஐந்து ஓவர்கள் கொண்ட இந்த கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 24 அணிகள் விளையாடவுள்ளன.

இச் சுற்றுப்போட்டிக்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் ஏ.டபிள்யு.எம்.ஜெஸ்மின், ஏ.டபிள்யு.றிஸ்வி மஹ்மூத், ஏ.எம்.றிலாஸ் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். சுற்றுப்போட்டியில் சம்பியன் கிண்ணத்தை பெற்றுக்கொள்ளும் அணிக்கு ரூ. 30 ஆயிரம் பணப்பரிசும், இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொள்ளும் அணிக்கு ரூ. 17 ஆயிரம் பணப்பரிசும், மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொள்ளும் அணிக்கு ரூ.7 ஆயிரம் பணப்பரிசும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹயிட்ஸ் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் – 2022 சம்பியனானது யூட் கிங்ஸ் இலவன்

(யாழ் நிருபர்)

ஹயிட்ஸ் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் 2022 சம்பியன் கிண்ணத்தை நடப்பு சம்பியன் ஹயிட்ஸ் சிற்றி கெப்பிட்டல் அணியை வீழ்த்தி சம்பியனானது யூட் கிங்ஸ் இலவன் அணி.

குறித்த கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹயிட்ஸ் சிற்றி கெப்பிட்டல் அணித் தலைவர் களத்தடுப்பை தெரிவுசெய்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய யூட் கிங்ஸ் இலவன் அணி வீரர்கள் ஹயிட்ஸ் சிற்றி கெப்பிட்டல் அணி பந்துவீச்சாளர்களை துவம்சம் செய்தனர்.

10 ஓவர்கள் நிறைவில் யுட் கிங்ஸ் அணி 7 விக்கெட் இழப்புக்கு 106 ஓட்டங்களை எடுத்தது. 107 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை துரத்திய ஹயிட்ஸ் சிற்றி கெப்பிட்டல் அணி வீரர்களான குமரன், அன்ரனி ஆகியோரின் அதிரடி ஆட்டத்தில் அணி இலக்கை துரத்தியது. ஆனாலும் சீரான வேகத்தில் விக்கெட்டுகள் சரிக்கப்பட்டதால் இறுதியில் ஹயிட்ஸ் சிற்றி கெப்பிட்டல் அணி 10 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதன்மூலம் 11 ஓட்டங்களால் யுட் கிங்ஸ் அணி வெற்றிபெற்று 2022 ஹயிட்ஸ் ப்ரீமியர் லீக் சம்பியனானது. சம்பியன் அணியான யூட் கிங்ஸ் அணிக்கு ரூ. 1 இலட்சம் பணப்பரிசுடன் சம்பியன் கிண்ணமும், இரண்டாவது இடம்பெற்ற ஹயிட்ஸ் சிற்றி கெப்பிட்டல் அணிக்கு ரூ. 50 ஆயிரம் பணப்பரிசிலும் வழங்கப்பட்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக ஜூட் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக காண்டீபனும், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக சுலக்சனும் தொடர் நாயகனாக வசிக்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.












# "இன்னும் இரு குழந்தைகளை பெற்றுக்கொண்டு வாழ்க்கையையும், கிரிக்கெட்டையும் மகிழ்ச்சியாக அனுபவியுங்கள்"

## - கோஹ்லிக்கு வோர்னர் அறிவுரை



நடப்பு ஐ.பி.எல். தொடரில் பாப் டு பிளெஸிஸ் தலைமையில் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் விளையாடிவரும் விராட் கோஹ்லி முதல் 9 போட்டிகளில் விளையாடி 128 ஓட்டங்களை மட்டுமே அடித்திருந்தார். குஜராத் அணிக்கு எதிரான போட்டியில் மட்டுமே அதிகபட்சமாக 58 ஓட்டங்கள் எடுத்தார். சமீபத்தில் விளையாடிய சர்வதேச போட்டிகளிலும் விராட் கோஹ்லி சொற்ப ஓட்டங்களையே பெறுகிறார்.

அவர் சிறிது நாட்கள் ஓய்வு எடுத்துகொள்ள வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி உள்ளிட்டோர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில், விராட் கோஹ்லி மீண்டும் தன்னுடைய சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த என்ன அறிவுரை கூறுவீர்கள் என டெல்லி அணி வீரர் டேவிட் வோர்னரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த வோர்னர், "விராட் கோஹ்லிக்கு ஒன்றுதான் சொல்ல விரும்புகிறேன். 'ஃபார்ம்' என்பது தற்காலிகமானது. 'கிளாஸ்' என்பதுதான் நிரந்தரம். எனவே, அதை நீங்கள் தவற விடாதீர்கள். உங்களுக்கு இப்போது நடப்பது அனைத்து வீரர்களுக்கும் நடப்பதுதான். இன்னும் 2 குழந்தைகளை பெற்றுக்கொண்டு, வாழ்க்கையையும் கிரிக்கெட்டையும் மேலும் மகிழ்ச்சியாக அனுபவியுங்கள்" என கூறினார்.

